# மள்ளர் மலர்

❁ ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் ❁ மலர் 12 ❁ இதழ் 7 ❁ ஜூலை 2006 ❁

# திருவிழா 4.7.2006

## பேரூர் பட்டீசுவர மள்ளர் ஏர் உழ பச்சை நாயகி, திருமகள், கலைமகள், இந்திராணி ஆதியோர் வயலில் இறங்கி நாற்று நட்டனர்



**பேரூரில் ஆனி உற்சவ நாற்று நடவு விழா நடந்தது. தேவேந்திர குல வேளாளா மக்கள் ஏர்கட்டி உழுத வயலில் இறங்கி நாற்று நட்டு பட்டீஸ்வரர், பச்சைநாயகியை வணங்கினர்.**

# ஜூலை 2006 – மள்ளர் மலர் – பொருளடக்கம்

பக்கம்


- தேனி மாவட்டம் செயமங்கலம் வட்டம் தேவேந்திர அமைப்புகள் முதல்வருக்கு அனுப்பிய வேண்டுகோள் - செ.மீ.கு. சிவமணி 2
- பேரூரில் தேவேந்திர குல வேளாளர் சமுகத்தின் சார்பில் ஆனி உற்சவ நாற்று நடவு விழா 3
- உழவனுக்கு உணவு கொடு முதலில் - எம்.வி. முருகப்பன், தமிழில் பா. இராமநாதன் 4
- இளைஞனே, இது உனக்காக 6
- வேலையிலும் கல்வியிலும் இடஒதுக்கீடு - வே. ஆனைமுத்து 7
- நூல் மதிப்புரை – நல்வாழ்வுச் சிந்தனைகள் - சலுப்பை கி. பாஷ்யம் 11
- பன்னிரு நாடு அரசுகளின் அரசர் பன்னிரு குடுமிகள் 12
- அன்புள்ள ஆசிரியருக்கு 13
- இலக்கியத் தொடர் – செங்கோட்டுப் பள்ளு 15
- தேவேந்திரர் வரலாறு தேவேந்திரர் – மள்ளர் – மல்லர் – பள்ளர் ஒருவரே முனைவர் இரா.நாகசாமி 18
- 14 எண்ணின் மகிமை 20


# தேனி மாவட்ட்ரம் செயமங்கலம் தேவேந்திர அமைப்புகள் முதல்வருக்கு அனுப்பிய வேண்டுகோள்

**தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**

**அனுப்புநர்**

1. **செ.மீ.கு. சிவமணி,** தலைவர்,
குடுமி, குடும்பன், மள்ளர் என்னும்
தேவேந்திர குல வேளாளர் உறவுமுறைச் சங்கம்,
காந்திஜி நகர், செயமங்கலம் அஞ்சல்,
பெரியகுளம் வட்டம்,
தேனி மாவட்டம் - 625 603.

2. **ம. நல்லமணி மள்ளர்,** தலைவர்,
மாமல்லர் சுந்தரலிங்க குடும்பனார்
இளைஞர் சங்கம்,
காந்திஜி நகர், செயமங்கலம் அஞ்சல்,
பெரியகுளம் வட்டம்,
தேனி மாவட்டம் - 625 603.

3. **அ. கீர்த்திபாண்டிய மள்ளர்,** ஒருங்கிணைப்பாளர்,
அரசியல் சார்பு அற்ற மூவேந்தர் எழுச்சி பிரச்சார
இயக்கம், காந்திஜி நகர், செயமங்கலம் அஞ்சல்,
பெரியகுளம் வட்டம்,
தேனி மாவட்டம் - 625 603.

**பெறுநர்**

**மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சமுகம்,**
புனித ஜார்ஜ் கோட்டை,
தலைமைச் செயலகம்,
சென்னை. - 600 009

மாண்புமிகு அய்யன் கலைஞர் அவர்கள் சமுகத்திற்கு,

மருதநில வேந்தன் வழி வந்த குடுமி, குடும்பன், மல்லர்-மள்ளர் என்னும் தேவேந்திர குல வேளாளர் இன மக்களின் அன்பான வேண்டுகோள்.

தமிழக வரலாறு தாங்கள் அறிந்ததே. வரலாற்று அடிப்படையில் தமிழகத்தைப் பிடித்த நாயக்க மன்னர்கள் மூவேந்தராக ஆட்சி புரிந்து வந்த, எங்களின் குலப்பெயரான மள்ளர்-மல்லர் என்பதை தங்களின் எழுத்திரெண்டு பாளையங்களிலும், நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளேசல் நூல்கள் செய்து அதை ஊர் ஊருக்குப் பிரச்சாரம் செய்து பள்ளன் என்று மாற்றி உள்ளனர்.

அதற்கு ஆதாரமாகப் பள்ளு நூல்களே சான்றாக விளங்குகின்றன. உதாரணமாக முக்கூடல் பள்ளு நூலில் அதன் ஆசிரியரே,

> "மள்ளர் குலத்தில் வரினும் இருபள்ளியருக்கு ஓர் பள்ளக் கணவன்....."

எனச் சான்று கூறி உள்ளனர்.

நாங்கள் எங்களை, எங்களது மூதாதையர் வைத்த மள்ளர் - மல்லர் என்ற பெயராலே எங்களை அழைக்க விரும்புகின்றோம்.

எனவே தாங்கள் அருள் கூர்ந்து அரசிதழில் பள்ளன் என்று இருப்பதை மள்ளர்-மல்லர் என்று மாற்றி அரசு ஆணை வெளியிடுமாறு மிக்க அன்புடனும் வணக்கமுடனும் வேண்டிக் கொள்கிறோம்.

மேலும் உழவுத் தொழில் மட்டும் பார்க்கும் உழவர்களை எந்த மாநிலத்திலும் பட்டியல் சாதியில் சேர்க்கவில்லை. அவ்வாறு இருக்க, தமிழகத்தில் மட்டும் எங்களை அடிமை கொண்டவர்களே ஆட்சியாளர்களாக

... தொடர்ச்சி 22 ஆம் பக்கம்

# மள்ளர் மலர்

மலர் 12 இதழ் 7

கடகம், திருவள்ளுவர் ஆண்டு 2037

தாரண- ஆடி, ஜுலை 2006

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 120/-

வாழ்நாள் கட்டணம்: ரூ. 1,500/-

தனி இதழ் : ரூ. 10/-

**அலுவலக முகவரி**

10/2 நால்வர் நகர், பாரதியார்
பல்கலைக் கழகம் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 046
தொலைபேசி : 0422-2422287
தொலைநகல் : 0422-2425300
மின்அஞ்சல்: mallarmalar@yahoo.com

**ஆசிரியர்**

முனைவர் குருசாமி சித்தர்
B.E., M.Sc.(Engg), Ph.D. (UConn-USA)

**துணை ஆசிரியர்கள்**

குரு. சித். செந்தில்குமார்
B.E., M.S., (TTU - USA)

மா. ராஜ்குமார் தேவேந்திரர் B.B.M.

மா. சிவக்குமார் தேவேந்திரர் B.E.

தேவேந்திர குல வேளாளர் சங்கத்திற்காக மா மன்னர் அச்சகம், கோவை-46 - இல் திருமதி துளசிமணி மாரியப்பன் அவர்களால் அச்சிடப்பட்டது. வெளியிடுபவர் டாக்டர் குருசாமி சித்தர்

## பேரூரில் தேவேந்திர குல வேளாளர் சமுகத்தின் சார்பில்

# ஆனி உற்சவ நாற்று நடவு விழா

பேரூரில் தேவேந்திர குல வேளாளர் சமுகத்தின் சார்பில் ஆனி உற்சவ நாற்று நடவு விழா நேற்று நடந்தது.

பேரூர் பட்டிஸ்வரர் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆனி கிருத்திகையன்று உற்சவ நாற்று நடவு விழா நடக்கிறது. மக்கள் அமைதியாக வாழவும், மழைவளம், இயற்கை வளம் பெற்று இன்புறவும் பட்டிஸ்வரர், பச்சைநாயகியே வயலுக்குள் இறங்கி நாற்று நட்டதாக வரலாறு உள்ளது. இந்த தொன்று தொட்ட வழக்கம், இந்த ஆண்டும் ஆனி கிருத்திகை நாளில் நடந்தது. இதையொட்டி, பேரூரில் உள்ள கேதாரீஸ்வரர், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு விசேஷ அபிஷேகம் நடந்தது.

நாற்று நடவு விதைபோடும் நிகழ்ச்சியுடன் துவங்கியது. பின் நாற்றுகள் தேவேந்திர குல வேளாளர் சமூக மடத்தில் வைக்கப்பட்டு காலை, மாலை இருநாட்களுக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. தேவேந்திர குல வேளாள சமுக மக்கள் புடை சூழ பட்டிஸ்வரர் கோவிலுக்கு முன் 5.30 மணிக்கு பொன்னேரு பூஜைகள் நடந்தது. பட்டீஸ்வரரும், பச்சைநாயகி அம்மனும் நாற்று நடும் மண்டபத்திற்கு கொண்டு செல்லப் பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து 6.00 மணிக்கு நாற்று நடும் வயலில் ஏர்கட்டி உழுது கோயில் குருக்களால் வயலின் மத்தியில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது.

இதையடுத்து பெண்களும், ஆண்களும் குழந்தைகளுடன் குலவை சத்ததுடன் வயலுக்குள் இறங்கி ஆர்வத்துடன் நாற்று நட்டனர்.

நாற்று நடவு மண்டபத்தில் கோயில் மணியகாரர் நடராஜ குருக்கள் தலைமையில் பட்டீஸ்வரர், பச்சைநாயகி அம்மனுக்கு நடத்தப்பட்ட மறுபூஜையுடன் விழா முடிவு பெற்றது. இதையடுத்து பேரூர் பட்டிஸ்வரர் கோவிலில் நடராஜபெருமானுக்கு ஆனித்திரு மஞ்சன விழா எனும் மகா அபிஷேக விழா நடத்தப்பட்டு, சிறப்பு பூஜைகளும் மகாதீபாராதனையும் நடந்தது.

❁ ❁ ❁

# சுதந்திரப் போராட்ட தியாகி சுந்தரலிங்கக் குடும்பனார் கல்வி அறக்கட்டளை

திருவாரூர் மாவட்டம் குன்னலூரில் சுந்தரலிங்கக் குடும்பனார் பெயரில் அறக்கட்டளை நிறுவி பல நல்ல திட்டங்களை வகுத்து ஏழை, எளிய மக்களுக்கு சிறந்த சேவை செய்து வருகின்றனர் இந்த இளைஞர்கள். மனிதநேயம் மிக்கவர்களும் அனைத்து முற்போக்கு சக்திகளும் ஆக்கமும் ஊக்கமும் அவர்களுக்கு அளிக்க வேண்டுகின்றன. அவர்களின் முகவரி : சுந்தரலிங்கனார் அறக்கட்டளை, குன்னலூர், பாண்டி மெயின் ரோடு, வேப்பஞ்சேரி (அஞ்சல்), திருவாரூர் மாவட்டம் - 614 703, தொலைபேசி : 04369-243224, 98426 32638, E-mail : IDsundarffset@yahoo.com

# உழவனுக்கு உணவு கொடு முதலில்

**எம்.வி. முருகப்பன்**

(இயற்கை முறை வேளாண்மை வல்லுநர், சென்னை, நன்றி : 28.5.2006 தி நியூ சண்டே எக்ஸ்பிரஸ் இதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் - **பா. இராமநாதன் எம்.ஏ.,** சென்னை.)

**மரபணு மாற்றப்பட்ட (genetically - modified) உணவுப்பயிர்களை நம் நாட்டில் நுழைய விட்டுள்ளோம்- நம் மக்களுக்குப் பேரழிவு இதனால் வரப்போகிறது என்று அறியாமல். இதனை விளக்குகிறது இக்கட்டுரை.**

உலக மக்கள் அனைவரின் உணவுத் தேவைகளை நன்கு நிறைவேற்ற மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களைப் பரப்ப வேண்டும் என்று இரண்டு வாரத்துக்கு முன்னர் கொழும்பு நகரில் போதனை செய்யப்பட்டது. மரபணு மாற்றப்பட்ட என்பது இனி "மமா" எனக் குறிக்கப்படும்.

2. ஏழை நாடுகளை (இவற்றை வளரும் நாடுகள் என்று வஞ்சகமாக பணக்கார மேலை நாடுகள் அழைக் கின்றன:) பசி, ஊட்டச்சத்துக் குறைவு போன்றவற்றிலி ருந்து விடுவித்து உணவும் வளமும் கொழிக்கும் நாடுகளாக ஆக்கிட மமா உணவே என்று கதைக் கிறார்கள். மமா உணவுப் பயிர் வித்துக்களையும் மமா உணவு வகைகளையும் இந்தியாவுக்குள் நுழையவிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பது தெரியாமலேயே நாம் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டோம்.

3. மமா உணவுப் பயிர்களும் உணவும் மனிதர்கள், ஆடு மாடுகள், வனஉயிர்கள், பிற உயிர்கள், தாவரங்கள் ஆகிய அனைத்துக்கும் புதுப்புது நோய்களை உண்டாக்க வல்லவை. இது ஒரு விளைவு. இது பற்றியும் ஏனைய விளைவுகளைப் பற்றியும் யாராவது யோசித்துள்ளனரா? மமா உணவுகளால் ஏற்படும் புதுநோய்கள் நாட்டையே நாசமாக்கிவிடும். அந்த நோய்களுக்கு விஞ்ஞானக் கிறுக்கர்கள் கண்டுபிடிக்கக்கூடிய பரிகாரங்கள் மேலும் புதுப்புது பிரச்சனைகளையும் கேடுகளையும் தரும். பிரச்சனை - பரிகாரம் - பரிகாரத்தால் புதுப்பிரச்சனை என்று நாசகாரத்தன்மை பெருகிக் கொண்டே போகும்.

4. நமக்கெல்லாம் உணவுப் பொருள்களைத் தரும் உழவர்கள் தங்களுக்கும் குழந்தைகளுக்கும் போதிய உணவின்றி வாடுகின்றனர். வேளாண் மக்களில் 40 விழுக்காட்டினர் நிலத்தை விற்றுவிட்டு உழவுத் தொழிலைக் கைகழுவ விரும்புகின்றனர். இதனால் இந்நாட்டில் அழிவுக்காட்படப் போகும் இந்திய மக்கள் எத்தனை கோடியினர் என்று எண்ணிப் பாருங்கள். உயிரற்ற புள்ளி விபரங்களையும் எண்ணிக்கைகளையும் பார்த்தால் இது புரியாது.

5. இந்திய விவசாயத்தில் மமா விதைகளைப் புகுத்துவது என்பது ஒரு மரத்தையே பிளப்பதற்கு ஆப்பின் நுனியை முதலில் நுழைப்பது போன்றது. 60 கோடி இந்திய உழவர்களை நாசமாக்கிவிடும் அது. உணவுப் பொருள்கள் விளைச்சல் அதிகமாகிவிடும் என்று எண்ணுவது மடத்தனம். நம் இந்திய மக்கள் தங்கள் உணவுக்குப் பிற (மேலை) நாடுகளை நம்பி அல்லல்படும் நிலையே ஏற்படும். தொழில்நுட்பவியல் கண்டுபிடிப்பு களும் (டெக்னாலஜி), வாணிகப் பெருக்க முயற்சிகளும் மனிதர்களைப் பற்றியோ அவர்கள் உயிரோடு பிழைத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றியோ கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. ஏழைகளைச் செல்வ ந்தர்களாக்கிட விஞ்ஞான - தொழில்நுட்ப முன்னேற்றம் எதுவானாலும் வழிவகுத்துவிடும் என்பது அறியாமை.

6. புதிய தொழில்நுட்பக் கிறுக்குக் கயவர்கள் கண்டுபிடிப்பதெல்லாம் நம் இந்திய நாட்டு கிராமப்புற ஏழைகள் வறுமையை நீக்கிவிடும், வேளாண் பொருள் உற்பத்தியைப் பெருக்கும், இந்தியர் அனைவருக்கும் உணவும் வளமும் தரும் என்று பலரும் (மூடத்தனமாக) நம்பி விடுகின்றனர்.

7. Agriculture என்னும் சொல்லில் உள்ள culture (கல்ச்சர்) சுட்டுவது என்ன என்று எண்ணிப் பாருங்கள். வேளாண்மை என்னும் வாழ்க்கை முறையானது நமது பண்பாடு, மரபு வழக்கங்கள், சமுதாயம், நல்வாழ்வு, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றுடன் பிணைந்தது புனித மானது என்பதை அது சுட்டுகிறது. மேல்நாட்டாரின் பேராசை, பிறரைச் சுரண்டி நாசமாக்கும் ஈனத்தனம் ஆகியவற்றுக்கு நேர் எதிரானது வேளாண்மை. நாம் கருத வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. பல கோடி இந்திய வேளாண் மக்களின் பிழைப்பைக் கெடுத்து நாசமாக்கும் மாற்றங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்குள்ள வாழ்வுரிமை; கிராமப்புற உழவர் வேலையிழந்து நகரங்களுக்குப் பிழைப்புத் தேடிச் சென்று அல்லல்படுதல்; உழவர்களை மனிதர்களாக நம்மையொத்த இந்தியக் குடிமக்களாக மதித்து நடத்துதல் போன்றவை அவ்விஷயங்கள்.

8. அறுபது கோடி உழவர்களின் வாழ்க்கைத் தொழிலைப் பாழாக்கி நாசப்படுத்தாமல் அவர்கள் வாழ்வைப் பாதுகாக்க வேண்டுமென்பதே நமது முதற்கடமையாகும். இந்தியாவில் விவசாயம் நடைபெறும் மொத்த நிலப்பரப்பில் பெரும் பகுதியானது கால் ஹெக்டேரிலிருந்து நான்கு ஹெக்டேர் வரைப் பயிர் செய்யும் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளின் நிலமேயாகும். இவர்கள் உயிர் வாழ்வதே விவசாயத்தால்தான். எனவே தாமே உழைத்தும், தேவையான அளவுக்கு அயலார் உழைப்பை (கூலி கொடுத்துப்) பெற்றும், உற்பத்திச் செலவை ஒரு வரம்புக்குள் வைத்துக் கொள்ள அவர்களால் இயல்கிறது.

9. மமா விதைகளைப் பயன்படுத்தினால் செலவு அதிகரிக்கும், பெரும் பண்ணைகளில் தான் அது இயலும். மமா விதை விவசாயம் நடந்தால் மண்ணில் உள்ள நுண்கிருமி வளம், நுண்சத்து வளம் ஆகியவை பாதிக்கப்பட்டு வளமான மண் வெறும் புழுதிக்காடாகிவிடும்.

10. இந்தியாவிலுள்ள 600க்கும் அதிகமான மாவட்டங்களிலுமே உழவர்களில் பலர் இன்னும் மண்ணின் இயற்கை வளத்தைப் பேணிக்காக்கும் முறைகளைக் கையாண்டு நிலத்தின் உற்பத்தி ஆற்றல் நெடுங்காலம் வளமாக இருக்கும் வண்ணம் புத்திசாலித்தனமாகப் பார்த்துக் கொள்கின்றனர். மண்வளத்தைப் பாதுகாக்க காற்றிலிருந்து நைட்ரஜனை எடுத்து நைட்ரேட்டுகளாக மாற்றி மண்ணோடு சேர்க்கும் நுண்கிருமிகளை ஊக்குவிக்கும் பருப்பு வகைகளைப் பயிரிடுதல், பயிர்ச்சிசுழற்சி, பசுந்தாளுரம் போன்றவற்றால் மண்ணில் பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற சத்துக்களை நிலைக்கச் செய்தல் ஆகியவையும் உதவுகின்றன. இலை தழைகளை உரமாகப் போடுவதால் மண்ணின் நீர் உறிஞ்சும் தன்மை அதிகரிக்கிறது. பாசனத்துக்கான தண்ணீர்த் தேவை கூட பல நேர்வுகளில் குறைகிறது. ஒரே பயிருக்குப் பதிலாக பல பயிர்களையும் பயிரிடுவதால் நில வளம் அதிகரிக்கிறது. புழுப்பூச்சித் தொல்லை குறைகிறது. பயிர்கள் நோயின்றி சிறப்பாக விளைகின்றன. ஒரே பயிரைப் பயிரிட்டால் வரும் ஆபத்தையும் (நோய், பூச்சிகளால் அழிவு, மகசூல் விலைக் குறைவு போன்றவை) தவிர்க்கலாம்.

11. சிறு விவசாயிகள் தங்கள் உணவுக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு மீதி விளைச்சலை விற்று விடுகின்றனர். இந்திய உணவு கார்பொரேசன் நாடெங்கும் தானியங்களைக் கொள்முதல் செய்கிறது. பெருஞ்செலவில் நெடுந்தூரம் தானியத்தைக் கொண்டு போகிறது. ஏராளமான தானியங்களை ஆங்காங்கு சேமித்து வந்தபோதிலும் பல வேளைகளில் அந்தந்தப் பகுதிக்கு வேண்டும் தானியம் அண்மையிலுள்ள அக் கார்பொரேசன் கிடங்குகளில் கிடைப்பதில்லை. நிர்வாகத் திறமைக்கோ சிக்கனத்திற்கோ இது வகை செய்வதாக இல்லை.

12. இந்தியப் பொதுப் பங்கீட்டுமுறை (ரேசன் கடை முறை) தரமான உணவுப் பொருள்களை வழங்குவதில்லை; பலவிடங்களில் ரேசன் கடைகளில் நீண்ட மக்கள் வரிசைகள் உள்ளன; ஆங்காங்கு லஞ்சமும் நடைமுறையில் உள்ளது. சிறு விவசாயி உள்ளூரிலோ அதையொட்டியோ தனக்குத் தெரிந்தவர்களுக்கோ பொருள்களை விற்றுக் கொள்வான்; நெடுந்தொலைவு அவற்றை அனுப்பும் பொழுது ஏற்படுவது போல பெருஞ்செலவுக்கு இடமிராது. கூடுமானவரை உள்ளூர் வேளாண் விளைச்சல் சுற்றுவட்டாரத்திற்குள் விற்கப்பட்டு நுகரப்பட வேண்டும். எஞ்சிய விளைச்சலே நெடுந்தொலைவு தாண்டி அனுப்பப்பட வேண்டும்.

13. விதை உற்பத்தியும் விற்பனையும் வெள்ளைக்கார மேல்நாட்டுக் கம்பெனிகளின் பிடிக்குள் வந்துவிட விட்டுவிடக் கூடாது; அப்படி விட்டுவிட்டால் அவைகள் நம் நாட்டு விவசாயிகளின் குரல்வளையை நெறித்து விடும்; அவர்களை அடிமைகளாக்கிவிடும். நமது அரசு வேளாண்மைக் கொள்கைகளை நிர்ணயிக்கும் மேதாவிகளும் வேளாண் விஞ்ஞானி(!)களும் இதைக் கண்டு கொள்வதில்லை. ராட்சதத்தனமே ரசிக்கத்தக்கது (Big is beautiful) என்பது அவர்கள் மூடநம்பிக்கை. ஏழை உழவனுக்காகக் கண்ணீர் விடுவதுபோல நடிப்பார்களேயொழிய அவனை முற்றிலும் மறந்துவிடுகின்றனர்.

14. இன்றைய இந்திய மக்கள் 100 கோடி பேர்களுள் 33 விழுக்காட்டினர் இன்று நகரங்களில் வாழ்கின்றனர். நகரவாசிகள் எண்ணிக்கை 2019ல் 39% ஆகவும் 2047ல் 51% ஆகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது (2047ல் இந்திய மக்கள் தொகை 157 கோடியாக இருக்கும்).

15. நவீனத் தொழில்நுட்பவியல் என்ற சாக்கில் கிராமப்புற மக்கள் என்ன ஆனால் என்ன என்ற நோக்கில் அறிவின்றிப் புகுத்தப்படவிருக்கும் கிறுக்குத்தனமான மாறுதல்களால் கிராமப்புற மக்கள் கோடி கோடியாக பிழைப்பை இழந்து நகர்ப்புறங்களுக்கு ஏதிலிகளாக வருங்காலத்தில் புகுவார்கள். அவர்களுக்கு எல்லாம் எப்படி வேலை கொடுக்க முடியும்? தானியங்கிப் பொறிகள் எங்கும் புகுந்துவிட்டதால் உற்பத்தித் தொழிற்சாலைகளில் தேவையான தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகக் குறைந்துவிட்டதால் அங்கு இனி கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகமாட்டா. எழுத்தர், ஆசிரியர், அரசுப்பணி, சிறுதொழில், சிறுவணிகம், போக்குவரத்து, தொலைக்காட்சி போன்றவற்றில் (Service industry) வேளாண்மை நாசமாக்கப்படுவதால் வேறு பிழைப்புத் தேடி கிராமங்களை விட்டு வெளியேறி நகரங்களுக்கு இடம் பெயரவிருக்கும் கோடிகோடி ஏழை மக்களுக்கு வேலைதர இயலவே இயலாது.

16. வேளாண்மையை ஊக்குவிப்பதும், வேளாண் பொருள்களுக்கு நியாயமான விலை உழவர்களுக்குக் கிடைக்கச் செய்வதுமான அரசுக் கொள்கையே இந்தியாவில் இன்று தேவை. இன்றுள்ள நிலைமை என்ன? தலைகீழானது! உழவனுக்கு உழைத்தற்கான நியாயமான ஊதியத்தில் சிறுபகுதி கூடக் கிடைப்பதில்லை. அவன் உழைப்பின் பயனாக உருவான செல்வத்தில் பெரும்பகுதி இடைத்தரகர்களுக்கும் வணிகர்களுக்கும் போய்விடுகிறது.

17. இந்திய மக்கள் தொகை அதிகரிப்பு ஆண்டுதோறும் 1.6 விழுக்காடு என்ற அளவிலேயே இருக்கும்படி பார்த்துக் கொண்டோமானால் இன்றும் வருங்காலத்திலும், இந்திய மக்கள் அனைவருக்கும் தேவையான உணவை அளித்து வர நமது வேளாண்மை திறன் வாய்ந்ததாகும். வேளாண் விஞ்ஞானம் (Agri science) என்னும் விவேகமற்ற மேலை வெள்ளை நாடுகளின் நாசகார நடைமுறையைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றாமல் நமது நாட்டின் இசைந்த வேளாண்மையைப் (Agriculture) பின்பற்றுவோமாயின் நமது பாரத நாட்டு மக்கள் அனைவரின் நல்வாழ்வுக்கும் வழிவகுத்தவர்களாவோம். இயற்கையை நாசமாக்காத விஞ்ஞானம், இயற்கையோடு இயைந்த நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் முழுமையான பார்வையுடன் நம் நாட்டின் பல கோடி விவசாயக் குடிமக்கள் நலனுக்கு உகந்தவாறு அத்தகைய வேளாண்மை அமைய வேண்டும்.

❋ ❋ ❋

# இளைஞனே, இது உனக்காக

தம்பி

### குறிக்கோள்

விழிப்பு நிலையில் மட்டுமின்றி, உறக்க நிலையிலுங்கூட உன் குறிக்கோளை நீ மறந்துவிடாதே. மலைகளில் மேய்கின்ற ஆடுகளின் மணி ஓசையைக் கேட்டுக் கொண்டே தான் இடையர்கள் உறங்கிக் கொண்டிருப்பார்கள்.

### வெல்ல இயலாது

பொறுமையுள்ள மக்களைப் படபடப்புக்காரர்களால் ஒரு போதும் வெல்ல இயலாது. காரணம், படபடப்பு வலிமையற்றது என்பதே.

### எளிது

சொல்லியபடி செய்வது கடினமன்று: மிக எளிது! ஆனால், சொல்லும்போது யோசித்துச் சொல்லப் பழகிக் கொள்ள வேண்டும்.

### வளைந்து கொடு

முரடர்களின் தாக்குதலை அழித்து ஒழிக்க எதிர்த்து நிற்பதைவிட, ஒதுங்கி நிற்பது நல்லது வெள்ளப் பெருக்கின் தாக்குதலிலிருந்து எப்படி உயிர்தப்பினீர்கள் என்று, ஆற்றங்கரையில் நிலைத்து நிற்கும் நாணற்செடிகளை நோக்கி வேரோடு வீழ்ந்துவிட்ட புளிய மரங்கள் கேட்டுக் கொண்டு இருக்கின்றன.

### வைக்குமிடம்

வைரத்தை இரும்புப் பெட்டியில் வை. நம்பிக்கையை யோக்கியனிடத்தில் வை. இன்றேல், ஏமாற நேரிடும்!

### அமைதி

ஒவ்வொருவனும் இன்பமயமான அமைதியைப் பெறவே ஆசைப்படுகிறான்: உழைக்கிறான். ஆனால் வெற்றி பெறுவதா வாழ்நாளில் அன்று: சாவுநாளில்!

### மகிழ்ச்சியடை!

நீ உனக்கு உரியதைப் பிறருக்குக் கொடு! அவரடையும் மகிழ்ச்சியைப் பார்த்து நீ மகிழ்ச்சியடை! அது அன்று தான் உனக்குப் புது இன்பத்தைத் தரக்கூடியது!

### வருந்துவது

சாவு ஒருபோதும் மக்களை வருத்துவதில்லை. சாவைப் பற்றிய பயமே வருந்தக்கூடியது!

### மாறுதல்

மனிதன் விலங்காக மாற ஆசைப்பட்டாலும் படலாம். ஆனால், அது நாயாக, நரியாக, கழுதையாக, குரங்காக மாறுவதாயிராமல் யானையாக மாறுவதாயிருக்க வேண்டும்.

### கடிதம்

நீ கோபம் வந்த போது எழுதும் கடிதங்களை உடனே தபாலில் போட்டுவிடாத! பெட்டியில் வை: மறுநாள் அதைப் படித்துப் பார். பிறகு அது தபாலுக்குப் போயிற்றா. குப்பைத் தொட்டிக்குப் போயிற்றா என்பதை எனக்கு எழுது!

### இறந்தகாலம்

இறந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேச வேண்டுமானால் எப்போதாவது பேசு! அதுவும், நாட்டை, மொழியை, சமூகத்தை, குடிப்பெருமையை முன் நிறுத்தியதாக இருக்க வேண்டும். உன்னை முன் நிறுத்தியதாக இருக்குமானால், ஒன்றுக்கும் பயன்படாமற் போய்விடும்!

### வேறு

படிப்பு வேறு. அறிவு வேறு என்பதை ஒப்புக் கொள்பவர்கள். படித்தவர்களின் அறிவு வேறு என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும், அறிவு வேறு, ஒழுக்கம் வேறு என்பதை ஒப்புக் கொள்ளுகிறவர்கள், அறிவுடையவர்களின் ஒழுக்கம் வேறு என்பதையும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

### நோயைத் தடுத்தல்

நோய் வராமல் தடுப்பவன் அறிஞன்:
வந்து தடுப்பவன் மனிதன்:
வந்தும் தடுக்காதவன் பிணம்.

### அணிகலன்

மண்ணுக்கு அணிகலன் தென்னை:
பெண்ணுக்கு அணிகலன் நாணம்:
கண்ணுக்கு அணிகலன் இரக்கம்.

### மதிப்பிடுதல்

முளையிலிருந்து விளைவை மதிப்பிடுதல் போல, செயலிலிருந்தும் விளைவை மதிப்பிடலாம்.

### வலுவற்றவை

அடிப்படையின் மீது எழும்பாத சுவரும், அனுபவத்தின் மீது எழும்பாத ஆலோசனையும் வலுவற்றவை.

### யோசியாமற் செய்

வாங்கி கொள்ளலாமா, வேண்டாமா என்ற எண்ணும் நிலை வந்தபோது வாங்காதே! கொடுத்து விடலாமா, வேண்டாமா என்று எண்ணும் நிலை வந்துவிட்டால் கொடுத்து விடு! உண்ணலாமா, வேண்டாமா என்று எண்ணும் நிலை வந்து விட்டால், உண்ணாதே! இம்மூன்றும் யோசியாமல் செய்ய வேண்டிய முடிவுகளாம்.

### நட்பு

மிக விரைவாக நண்பர்களைப் பெற்றுக் கொண்டே போகிறவன், அதிவிரைவாக நண்பர்களை இழந்து கொண்டே வருவான்.

**-முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.**

அறிவுக்கு உணவு என்ற நூலிலிருந்து

நன்றி - தமிழ் பாவை

# வேலையிலும் கல்வியிலும் இடஒதுக்கீடு : இடஒதுக்கீட்டில் ஆர்வம் கொண்ட எல்லோரும் சிந்தியுங்கள்!

- வே. ஆனைமுத்து, சென்னை

**வினா-1 :** அரசமைப்புச் சட்டத்தில் உள்ள இடஒதுக்கீடு பற்றிய விதிகள் யாவை?

விடை : வேலையில் இடஒதுக்கீடு பற்றி விதி 16(4) உள்ளது. இது 26.1.1950 முதற்கொண்டு சட்டத்தில் உள்ளது. இது மேதை அம்பேத்காரால் செய்யப்பட்டது.

**வினா-2 :** எந்தெந்த வகுப்புகளுக்கு வேலையில் இடஒதுக்கீடு தரப்பட்டது?

விடை : அரசு வேலைகளிலும் பதவிகளிலும் போதிய பிரதிநிதித்துவம் பெறாத எல்லாப் **"பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்களுக்கும்"** இடஒதுக்கீடு தரப்பட்டது.

**வினா-3 :** "பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள்" என்பதன் பொருள் என்ன?

விடை : பட்டியல் குல வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் இவர்களைப் போல் பட்டிய லிடப்படும் மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(O.B.C.), ஆங்கிலோ இந்தியர்.

இது, விதி 338(10)இல் இப்போதும் இப்படியே தெளிவாக உள்ளது.

**வினா-4 :** எந்தெந்த வகுப்பினருக்கு, எப்போது முதல் இடஒதுக்கீடு கிடைத்து வருகிறது.

விடை : பட்டியல் குல வகுப்பினருக்கு (S.Cs.) 11.8.1943 முதல் மத்திய அரசு வேலைகளில் மட்டும் 8.3 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இது 1947இல் 12.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. 1970இல் 15 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

1950 முதல் பட்டியல் பழங்குடிகளுக்கு (S.Ts.) 5 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இது 1970 இல் 7.5 வழுக்காடாக உயர்த்தப்பட்டது.

**இந்த இரு பிரிவினருக்கும் மாநில அரசு வேலைகளில் வட மாநிலங்களில் 1950 இல் தான் முதன்முதலாக இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. ஆனால் சென்னை மாகாணத்தில் மட்டும் 1927 இலேயே பட்டியல் குலத்தாருக்குத் தனி இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது.**

இந்த இரண்டு பிரிவினருக்கும் விகிதாசார இடஒதுக்கீடு உள்ளது. இது மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடும்.

**வினா-5 :** பிற்படுத்தப்பட்டோருக்கு (B.Cs.) எப்போது இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

விடை : தமிழ்நாடு, கேரளம், கருநாடகம், ஆந்திரம் அடங்கிய சென்னை மாகாணத்தில் முதன் முதலாக 1947 நவம்பரில் 14 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இது 1954 இல் 25 விழுக்காடாகவும், 1971 இல் 31 விழுக்காடாகவும், 1980 இல் 50 விழுக்காடாகவும் தமிழ்நாட்டில் உயர்த்தப்பட்டது. மற்ற தென் மாநிலங்களிலும் வேலையில் இவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

**ஆனால் 31.10.1978 வரை எந்த வடமாநிலத்திலும் வேலையில் பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி இடஒதுக்கீடு ஒரு விழுக்காடு கூட வழங்கப்படவில்லை.**

மத்திய அரசில் வேலைகளில் மட்டும் 1990 ஆகஸ்டில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட்டது. ஆயினும் அந்த 27 விழுக்காடு இடஒதுக்கீடு 1994 இல் தான் நடப்புக்கு வந்தது. நடைமுறைப்படுத்தும்போது, பொருளாதாரத்தில் முன்னேறிய பிற்படுத்தப்பட்டவர்களை ஒதுக்கிவிட்டுத்தான் ஒதுக்கீடு தரப்படுகிறது.

**வினா-6 :** 27 விழுக்காடு என்பது பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசார இடஒதுக்கீடா?

விடை : இல்லை. இந்திய அளவில் இன்று பிற்படுத்தப்பட்டோர் 60 விழுக்காடு உள்ளனர். தமிழ்நாட்டில் 67.5 விழுக்காடு உள்ளனர்.

**ஆனால், மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் இன்றுவரை இவர்களுக்கு வேலையில் விகிதாசார இடஒதுக்கீடு தரப்படவில்லை.**

**வினா-7 :** ஏன் விகிதாசார இடஒதுக்கீடு தரப்படவில்லை?

விடை : அரசமைப்புச் சட்ட விதி 16(4)இல் ஒவ்வொரு வகுப்புக்கும் விகிதாசாரம் தரப்பட வேண்டும் என்று குறிக்கப்படவில்லை.

ஆனாலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும், பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் பழங்குடியினர், பட்டியல் குலத்தாருக்கான இடஒதுக்கீடு மொத்தத்தில் 50 விழுக்காட்டுக்கு மேல் இருக்கக் கூடாது என்று 1963 இல் இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

அது தவறு என்று கூறி யாரும் போராடவில்லை. பிறகு 16.11.1992 லும் அதே போல் உச்சநீதிமன்றம் கூறிவிட்டது.

அதை எதிர்த்து, எல்லா வகுப்பினருக்கும் அவரவர் மக்கள் தொகைக்குச் சமமான இடஒதுக்கீடு தருவதற்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துங்கள் என்று கோரி மா.பெ.பொ.க.வும், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் 26.12.1993 முதல் கடந்த 13 ஆண்டுகளாகத் தொடர்ந்து கோரி வருகின்றன.

தெருவுக்கு மக்களைக் கொண்டு வந்து போராடவில்லை. மக்களை அதற்கு ஆயத்தப்படுத்தவில்லை. மாணவர்களும், படித்த அலுவலர்களும், ஆசிரியர்களும் எந்தக் கட்சியும் -எந்தச் சமூகத்தாரும் இதற்குப் பங்களிப்புச் செய்யவில்லை.

## 2. கல்வியில் இடஒதுக்கீடு

**வினா-8 :** அரசமைப்புச் சட்டத்தில் கல்வியில் இடஒதுக்கீடு அளிப்பதற்கு இடம் இருக்கிறதா?

விடை : அரசமைப்புச் சட்டத்தில் விதி 15(4) இல் கல்வியில் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**வினா-9 :** எந்தெந்த வகுப்பினருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது?

விடை : (1) சமூகத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள், (2) பட்டியல் குல வகுப்பினர், (3) பட்டியல் பழங்குடியினர் ஆகிய மூன்று வகுப்பினருக்கும் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**வினா-10 :** இந்த விதி எப்போது அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றது?

விடை : பெரியாரின் முயற்சியால் 2.6.1951 இல் அரசமைப்புச் சட்டத்தில் விதி 15(4) இடம் பெற்றது.

**வினா-11 :** 1951 வரையில் மேற்கண்ட வகுப்பினருக்குக் கல்வியில் இடஒதுக்கீடு தரப்படவில்லையா?

விடை : 1940 தொடங்கி **சென்னை மாகாணத்தில் மட்டும்** 5 வகுப்பினருக்குக் கல்வியில் தனித்தனி இடஒதுக்கீடு தரப்பட்டது. அதன்படி பட்டியல் குல வகுப்பினருக்கு 1940இல் தனி இடஒதுக்கீடு தரப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 1947 இல் இடஒதுக்கீடு தரப்பட்டது.

எல்லாத் தென்மாநிலங்களிலும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் குல வகுப்பினருக்கு அப்போது முதல் மாநிலக் கல்வியில் இடஒதுக்கீடு கிடைக்கிறது. பட்டியல் குலப் பழங்குடியினருக்கு இந்திய அளவில் 1950 இல் தான் மாநிலக் கல்வியில் முதன் முதலாக இடஒதுக்கீடு தரப்பட்டது.

**வினா-12 :** மய்ய அரசுப் பல்கலைக்கழகங்களில் இப்போது எந்தெந்த வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது?

விடை : பட்டியல் குல வகுப்பினர், பட்டியல் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

**இடஒதுக்கீடு பெற உரிமையுள்ள - இன்னொரு பிரிவாரான பிற்படுத்தப்பட்டோருக்கு 31.5.2006 வரை மய்ய அரசுப் பல்கலைக்கழகங்களில் இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை.**

**வினா-13 : தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (IITs), மேலாண்மைப் பயிற்சிக் கல்வி நிறுவனங்கள் (IIMs), அறிவியல் ஆய்வுக் கல்வி நிறுவனம் (I.Sc) முதலானவற்றில் எந்தெந்த வகுப்பினருக்கு இடஒதுக்கீடு கிடைக்கிறது?**

விடை : பட்டியல் குல வகுப்பினருக்கும், பட்டியல் பழங்குடியினருக்கும் இடஒதுக்கீடு கிடைக்கிறது. ஆனால் இது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஊரறிந்த உண்மை.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இந்நிறுவனங்களில் 31.5.2006 வரை இடஒதுக்கீடு தரப்படவில்லை.**

**வினா-14 :** பிற்படுத்தப்பட்டோருக்கு ஏன் இடஒதுக்கீடு தரப்படவில்லை?

விடை : இதற்கு ஒரு கசப்பான வரலாறு உண்டு. இந்தியாவிலுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு இந்திய அரசு எதிலும் இடஒதுக்கீடு தருவதற்கு விரும்பவில்லை என்று மய்ய அரசு 1961 மே திங்களில் முடிவெடுத்தது. அந்த முடிவை, அன்றையப் பிரதமர் பண்டித நேரு மாநில முதலமைச்சர்களுக்கு 1961 ஆகஸ்டில் இரகசிய மடல்கள் (D.O. Letters) மூலம் அறிவித்தார். மாநில அரசுகளும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு எதுவும் தரக்கூடாது. வேண்டுமானால் அவ்வகுப்பினரின் பிள்ளைகளுக்குப் படிப்பதற்கான பண உதவி (Cash Scholarship) தரலாம் என்று மாநில முதல்வர்களுக்கு அவர் அறிவித்தார்.

**இதை அப்படியே 1978 வரையில் வடஇந்திய மாநில அரசுகள் பின்பற்றின.**

தென் மாநிலத்தில் பெரியார் மட்டுமே 1934 முதல் மத்திய அரசுக் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் விகிதாசார இடஒதுக்கீடு கோரினார்.

**"பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசுக் கல்வியிலும் வேலையிலும் தனி இடஒதுக்கீடு வேண்டும்" என்கிற கோரிக்கையை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி முதன்முதலாக 8.5.1978 இல் இந்திய அரசின் முன் வைத்து, கடந்த 28 ஆண்டுகளாகத் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. மற்றக் கட்சிகளும் இதில் உண்மையான பற்றுடன் 1982 முதல் ஈடுபட்டுப் போராடுகின்றன.**

**ஆனால் 31.5.2006 வரை இது கிடைக்கவில்லை.**

**வினா-15 :** இப்போது நம் முன் உள்ள சிக்கல் என்ன?

விடை : 2004 முதல் இப்போது இந்தியாவில் அமைந்துள்ள அய்க்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) அரசுக்கு எல்லாக் கட்சியினரும், பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் குல வகுப்பினர், பட்டியல் பழங்குடி வகுப்புகளைச் சார்ந்த அமைப்பினரும் மய்ய அரசுப் பல்கலைக்கழகங்களிலும், மய்ய அரசுத் தொழில்நுட்ப நிறுவனங்களிலும், அறிவியல் ஆய்வுக் கல்வி நிறுவனங்களிலும், மருத்துவ உயர் ஆய்வுக் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு உடனே தரவேண்டும் என்று மனமாரக் கோருகின்றனர்.

ஆனால் 1961 முதல் தகுதி என்கிற பேரால்

பெரும்பாலான இடங்களைப் பெற்று, உயர்கல்வி கற்று, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெரிய பெரிய பதவிகளைப் பெற்று, மாதந்தோறும் இலட்சக்கணக்கில் சம்பளம் பெறுகிற மேல்சாதி - பணக்கார - பட்டினம் சார்ந்த வகுப்பினர், இன்றுவரை அக்கிரமமாக - அநியாயமாக - அரசமைப்புச் சட்டத்தின் சரத்துக்கு எதிராகத் தாங்கள் அனுபவித்து வந்ததை இழக்க முடியாது - குறைக்கக் கூடாது என்று கூறி, வன்முறையை மேற்கொண்டு போராடுகின்றனர்.

**ஆனால் உரிமை பறிக்கப்பட்டுக் கீழே கிடக்கிற பிற்படுத்தப்பட்டோர் - பெற்றோரும், மாணவரும், அலுவலரும், ஆசிரியரும், மருத்துவரும், வழக்குரைஞரும், சமூகத் தலைவர்களும், கட்சிகளின் தலைவர்களும் தெருவுக்கு வந்து கூக்குரல் போடக்கூட அஞ்சுகின்றனர். உதைபட, அடிபட, உதைதர ஆயத்தமாகிட மறுக்கின்றனர்.**

**வினா-16 :** இப்போது உள்ள உண்மையான நிலை என்ன?

விடை : பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மய்ய அரசுப் பல்கலைக்கழகங்கள், மய்ய அரசு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் 27 விழுக்காடு ஒதுக்கீடு வாங்குவது என்று நாடாளுமன்றம் கொள்கை அளவில் 2005 டிசம்பரில் முடிவெடுத்துவிட்டது.

நாடாளுமன்றம் எடுத்த முடிவைப் பற்றி விவாதிக்க, மய்ய அமைச்சரவையைக் கூட்டிடுவது என்றும் அரசு முடிவு செய்துவிட்டது. அதற்கான ஆலோசனைகளை வழங்கக் கோரி மத்திய அமைச்சர் ஒவ்வொருவருக்கும் சுற்றறிக்கைக் குறிப்பும் (Circulation Note) 2006 பிப்ரவரியிலேயே அனுப்பப்பட்டுவிட்டது.

இந்த நடப்பு விவரத்தைப் பற்றி மக்கள் நல மேம்பாட்டு (H.R.D.) அமைச்சர் அர்ஜுன் சிங் 2006 மார்ச்சு மாதம் வெளிப்படுத்தியவுடன், கட்டுப்பாடாக, (1) மேல்சாதித் தலைவர்கள் (2) மேல்சாதிப் பத்திரிக்கைக்காரர்கள் (3) மேல்சாதி அதிகாரிகள், (4) மேல்சாதி மாணவர்கள் (5) அய்அய்.டி, அய்.அய்.எம். அய்.அய்.எஸ்சி மற்றும் மருத்துவக் கல்வி மாணவர்கள் 2006 ஏப்ரல் முதல் தெருவுக்கு வந்து போராடத் தொடங்கிவிட்டனர்.

**குடிஅரசுத் தலைவர் அப்துல் கலாம், திட்டக் குழுத் துணைத் தலைவர், மற்றும் தேசிய அறிவாளிகள் ஆணையத்தின் (National Knowledge Commission) உறுப்பினர்கள், முன்னாள் பிரதமர் வி.பி.சிங், அய்.அய்.டி. முதலான நிறுவனங்களின் இயக்குநர்கள் - முதல்வர்கள், பிரதமரால் அமர்த்தப்பட்ட மத்திய அமைச்சர்கள் குழுவைச் சார்ந்த பிரணாப் முகர்ஜி, ப. சிதம்பரம் என எண்ணற்றோர் - மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காடு இடங்களைப் பிற்படுத்தப்பட்டோருக்குத் தருவதனால், உயர் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு ஏற்படும் 27 விழுக்காடு இழப்பை - குறைவை ஈடுகட்டுவதற்காக, ஒவ்வொரு நிறுவனத்திலும், இப்போது உள்ளதில் 54 விழுக்காடு இடங்களைப் புதிதாக உருவாக்கி, அது முழுவதையும் உயர் தகுதி உள்ளவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று ஓங்கி உரத்துக் கூறிவிட்டனர்.**

**இது மானமும், அறிவும் உள்ள எவராலும் ஏற்கப்பட முடியாதது, ஏற்கப்படக்கூடாதது.**

**வினா-17 :** ஏன் ஏற்கப்படக் கூடாதது?

விடை : அய்.அய்.டி. (IIT) என்னும் இந்தியத் தொழிற்கல்வி நிறுவனம் 7 இடங்களில் உள்ளது. இவை 1961இல் தொடங்கி நிறுவப்பட்டவை.

இவற்றில் 2006 - 2007 கல்வி ஆண்டுக்கு 4000 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இவர்களுள் 600 மாணவர்கள் பட்டியல் குல வகுப்பினர் (S.Cs.); 300 மாணவர்கள் பட்டியல் பழங்குடியினர் (S.Ts). இந்த 900 பேரும் அனைத்திந்தியக் கூட்டு நுழைவுத் தேர்வு (IIT-JEE) எழுதி அதில் தேர்ச்சி பெற்றுத் தான் இடம் பெற்றார்கள். அதாவது, தகுதியினால்தான் இடம் பெற்றார்கள். இந்த 900 இடங்கள் போக, மீதம் உள்ள இடங்கள் 3,100. இந்த 3,100 இலும் எல்லா வகுப்பினரும் தகுதி அடிப்படையில் இடம் பெறுவர். ஆனால் உயர் மதிப்பெண் காரணமாக, இந்த 3100 இடங்களுள் 2,800 இடங்களுக்கு மேல் மேல்சாதி - பணக்கார - பட்டினம் சார்ந்த வகுப்பினரே இடம் பெறுவர்.

பிற்படுத்தப்பட்டோருக்கு இப்போது 27 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட்டால், 4000 இடங்களுள் 1080 இடங்கள் இவர்களுக்குத் தரப்பட வேண்டும்.

இந்த 1080 இடங்களுக்குப் பதிலாக உயர் தகுதி பெற்ற மாணவர்களுக்காக 54 விழுக்காடு (அல்லது) 2160 இடங்களைப் புதிதாக உருவாக்கி, அந்த இடங்களை முழுவதுமாக உயர்தகுமத என்கிற பேரால் மேல்சாதி -, Upper Caste, மேல்தட்டு - Upper Crust மாணவர்களுக்கே தந்துவிட வேண்டும் என்ற மேலே கண்ட தலைவர்களும், அறிவாளிகளும், மாணவர்களும், மருத்துவர்களும் கூறுகின்றனர், கோருகின்றனர். இதற்காக வன்முறை மூலம் போராடவும் துணிந்துவிட்டனர்.

இது முதலில் அரசமைப்பு விதிக்கு எதிரானது, மக்கள் நாயகக் கோட்பாட்டுக்கு முரணானது, வஞ்சிக்கப்பட்ட வகுப்பினரைப் பழிவாங்குவது. இந்த அநியாயத்தை எதிர்த்து ஒடுக்கப்பட்ட வகுப்புகளிலுள்ள ஒவ்வொருவரும் போராட வேண்டும்.

இந்த நிலையில், மய்ய அரசுக் கல்வியில் 2006 சூனில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டைத் தருவதில்லை என்றும், 2007 சூனில் (2007 - 2008 கல்வி ஆண்டு) 27 விழுக்காடு தருவது என்றும்; அப்படி 27 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்வதால் உயர் தகுதியுள்ள மாணவர்களுக்கு ஏற்படும் இட இழப்பை ஈடுகட்டுவதற்காக, 50 விழுக்காட்டுக்கு மேல் இடங்களை அதிகப்படுத்த, அப்படி அதிகப்படுத்தப்படும் இடங்களை முழுவதுமாக அவர்களுக்கே கொடுத்து விடுவது என்றும் இந்திய அரசு 22.5.2006 இல் முடிவு செய்துவிட்டது. இது கடுங்கண்டனத்துக்கு உரியது. இது, 1961 முதல் கடந்த

45 ஆண்டுக் காலமாக படிப்புக்கான மொத்த இடங்களில் 75 விழுக்காட்டை அபகரித்து ஆக்கிரமித்துக் கொள்ளையடித்த 15 விழுக்காடு உள்ள மேல்சாதியினரின் உயர் கல்விக் கொள்ளை தொடர்ந்து நடைபெற, அரசும் அறிவாளிகள் என்கிற அகம்பாவிகளும் துணைபோவதே ஆகும்.

**வினா-18 :** 27 விழுக்காடு இடஒதுக்கீட்டைப் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கிட அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் ஏதேனும் செய்ய வேண்டுமா? அவசரச் சட்டம் மூலம் (Ordinance) நிறைவேற்றலாமா?

விடை : அவசரச் சட்டம் என்பது தவறானது. அவசரச் சட்டத்தை முறையான சட்டமாக ஆக்கிட, மீண்டும் நாடாளுமன்றத்தில் மசோதா முன்மொழியப்பட வேண்டும்; அது சட்டமாக்கப்பட வேண்டும். முதலில், இவை தேவையற்றவை.

**வினா-18 :** வேறு எப்படி அமல்படுத்துவது?

விடை : சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு (B.Cs.) கல்வியில் இடஒதுக்கீடு தரவேண்டும் என்பது 2.6.1951 முதல் ஏற்கெனவே விதி 15(4) இல் உள்ளது. இப்போது சேர்க்கப்பட்ட விதி 15(5) இல் போதிய ஏற்பாடு இருக்கிறது. ஆனால் இந்திய அளவில் பிற்படுத்தப்பட்டோர் எந்தெந்த உள்சாதியினர் என்கிற பட்டியல் (Schedule) 1955 இல் தான் உருவாக்கப்பட்டது. அந்தப் பட்டியலை இந்திய அரசு ஏற்கவில்லை.

1980 இல் பி.பி. மண்டல் குழு அளித்த பட்டியலை, இந்திய அரசு 1982 இலேயே ஏற்றுக் கொண்டது. அப்போது முதலே மத்திய அரசுக் கல்வியிலும் வேலையிலும் 27 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோருக்குத் தரப்பட்டிருக்க வேண்டும்.

1990 இல் வி.பி. சிங் அரசு முதன்முதலாக **மய்ய அரசு வேலையில்** மட்டுமே இவ்வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு தந்தது. அது 1994 இல் அமலுக்கு வந்தது. 1994 இலேயே பி.வி. நரசிம்மராவ் அரசு கல்வியில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்திருக்க வேண்டும். இவ்வளவு நெடிய காலத்தில் (1982 முதல் 2006) மய்ய அரசுக் கல்வியில் பிற்படுத்தப்பட்டோருக்குத் தரப்படாமல் வஞ்சிக்கப்பட்ட 27 விழுக்காடு இடஒதுக்கீட்டைத் தான் இப்போது அளிக்கக் கோருகிறோம்.

**இதை அளிக்க மறுப்பது அரசமைப்புச் சட்டத்தை அவமதிப்பது, மீறுவது குற்றம். 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளிப்பதால் இழப்பு ஏற்படுவதாகச் சொல்லி, அதிக இடங்களை உருவாக்கி, அதை அப்படியே மேல்சாதி மாணவர்களுக்குத் தகுதி என்கிற பேரால் தருவது - 60 கோடி பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களை அவமானப்படுத்துவது, பட்டியல் குல வகுப்பினரை பட்டியல் பழங்குடியினரை உதாசீனப்படுத்துவது.**

**வினா-20:** அப்படியானால் தீர்வு தான் என்ன?

விடை : 2005 டிசம்பரில் நாடாளுமன்றம் எடுத்த முடிவை நிறைவேற்றிட ஏற்ற வகையில், மய்ய அமைச்சரவையினர் கூடிப் பின்கண்டவாறு முடிவு செய்ய வேண்டும்.

1. பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு அரசமைப்பு விதி 15(4) இல் வழங்கப்பட்டுள்ள கல்வியில் இடஒதுக்கீட்டு உரிமையை அளிக்கிற தன்மையிலும், 1980 இல் அளிக்கப்பட்ட பி.பி. மண்டல குழு பரிந்துரையில் கண்டபடி 27 விழுக்காடு இடங்களை மய்ய அரசுக் கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் 2006 - 2007 கல்வி ஆண்டு முதல் வழங்குவது என்றும்,

**2. அரசமைப்புச் சட்ட விதி 246 இன் கீழ், ஏழாவது அட்டவணையில் பட்டியல் I - Union List - இன் கீழ் உள்ள பதிவுகள் 62 முதல் 66 வரை உள்ளவற்றில் காணப்பட்டுள்ள இந்திய அரசுப் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள், உயர் அறிவியல் கல்வி, மருத்துவ ஆய்வுக் கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் 2006 - 2007 கல்வி ஆண்டு தொடங்கி பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி நடைமுறைப்படுத்துவது என்றும் முடிவு செய்கிறது எனத் தெளிவான நிலைப்பாட்டை இந்திய அரசு 2006 சூனிலேயே மேற்கொள்ள வேண்டும்.**

**சட்டத்தில் ஏற்கெனவே உள்ளதை அரசு நடைமுறைப்படுத்தப் போவதால், புதிதாகச் சட்டத் திருத்தம் எதுவும் செய்யப்பட வேண்டியதில்லை.**

**3. மேலே கண்ட எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் ஒவ்வொன்றிலும் 2005 - 2006 கல்வி ஆண்டில் இருந்த மொத்த இடங்களின் எண்ணிக்கையை உயர்த்துவது என்றால், அப்படி உயர்த்தப்படும் ஒவ்வொரு 100 இடங்களிலும் பட்டியல் பழங்குடியினருக்கு 7.5 விழுக்காடு, பட்டியல் வகுப்பினருக்கு 15 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடங்களை அரசும், அந்நிறுவனங்களும் கட்டாயம் ஒதுக்கித் தர வேண்டும் என அரசு முடிவெடுக்கச் செய்ய வேண்டும்.**

எவ்வளவு பெரிய உயர்நிலைப் பதவியிலும் பொறுப்பிலும் உள்ளவர்களும், எவ்வளவு பெரிய உயர் கல்வியாளர்களும் புகழ்பெற்ற அறிவாளிகளும் கூறினாலும் - புதிதாகக் கூட்டப்படும் 100 விழுக்காடு இடங்களையும் முழுவதுமாக உயர் தகுதி பெற்றவர்கள் என்கிற பேரால் மேல்சாதி - மேல்தட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுவது என்கிற முடிவு அரசமைப்புச் சட்ட விதிகள் 15(4), 15(5), 16(4), 16(5), 29(2), 335, 338(10) இவற்றுக்கு எதிரானதும், மக்கள் நாயக உரிமைக் கோட்பாட்டுக்கு நேர் எதிரானது ஆகும்.

**வினா-21 :** இடஒதுக்கீடு தரப்படுவோருக்கு, பொருளாதார வரம்பு பார்த்து - பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினரை நீக்க வேண்டும் என்பது சரியா?

விடை : சரியாகாது. இந்தத் தீய சிந்தனைக்கு 1991 இல் வித்திட்டவர் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஆவார். அதை 16.11.1992 தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் ஏற்று அறிவித்தது. அதாவது - பிற்படுத்தப்பட்டோரில் உள்ள பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினரை நீக்கிவிட்டுத் தான், 27 விழுக்காடு இடஒதுக்கீடு தர வேண்டும் என உச்சநீதிமன்றம்

கூறிவிட்டது. அதை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துகிறது.

**இது பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டும் இழைக்கப்படும் ஒரவஞ்சனை நடப்பு ஆகும். எனவே அதனை நீக்க வேண்டும் என்று கோரப்படுகிறது.**

இந்த நிலையில், சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் கரத் தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் பொருளாதார வரம்பு வைத்து, அவர்களுள் வளர்ந்த பிரிவினரை நீக்கிவிட்டுத்தான் அவர்களுக்கு இடஒதுக்கீடு தரவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். இது அடாதது. இதை எதிர்த்துப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்.

**முன்னேறிய வகுப்புகளில் குடும்பம் தோறும் மாவட்ட நீதிபதிகள், மாவட்ட ஆட்சியர், துணை ஆட்சியர்கள், பொறிஞர்கள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள் உள்ளனர். அவர்களைத் தொடாத பொருளாதார வரம்பு ஒடுக்கப்பட்டோருக்கு மட்டும் ஏன்?**

இது வரையில் இடங்களை முழுவதுமாக ஆக்கிரமித்தவர்கள், இப்போது மொத்தக் கொள்ளையில் 27 விழுக்காடு இடங்கள் குறைவதால், புதிதாக 54 விழுக்காடு இடங்களை உருவாக்கி அவ்வளவையும் விழுங்கி வேண்டி, **இந்திய அரசு 8,000 கோடி ரூபாவை 5** ஆண்டுகளில் செலவிட வேண்டும் என்று திட்டமிடுவதும் அதைச் செயல்படுத்திட இந்திய அரசும், பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் மற்ற அமைச்சர்களும் ஒத்துக் கொள்ளுவதும் பச்சை அயோக்கியத் தனமானதாகும். இதை ஏற்றுக் கொண்டு, ஏதோ கிடைத்தவரையில் போதும் என வாளாவிருப்போர், மானங்கெட்ட சோதாக்களே ஆவர்.

இதை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களும் இளைஞர்களும் உயிரைப் பணயம் வைத்துப் போராட முன்வாருங்கள். அப்போதுதான் நாம் மானமுள்ள மனிதர்கள். இன்றேல் வெறும் சோற்றுத் துருத்திகளே ஆவோம். அப்படி ஆகாதீர்கள் என அனைவரையும் வேண்டுகிறேன்.

ஒடுக்கப்பட்ட வகுப்பினர் எல்லோரும் இவற்றை அருள்கூர்ந்து உணருங்கள்.

கட்சி, அமைப்பு, சாதி, தலைமை வேறுபாடு கருதாமல் ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும், பேராசிரியர்களும், வழக்குரைஞர்களும், மருத்துவர்களும், பொறிஞர்களும், வணிகர்களும், வேளாண் பெருமக்களும், பெற்றோர்களும் ஒன்றுதிரண்டு ஊர்தோறும் - தெருத்தோறும் சென்று விழிப்புணர்வை ஊட்டுங்கள்.

சரியான புரிதலுடன் சரியான திசையில் போராட முன்வாருங்கள்!

உள்ளதை உள்ளபடி உணருங்கள்! உரிமைக்குப் போராட முன்வாருங்கள்!

- வே. ஆனைமுத்து

நன்றி : சிந்தனையாளன், சூன் 2006

நூல் மதிப்புரை

# நல்வாழ்வுச் சிந்தனைகள்

நூல் : நல்வாழ்வுச் சிந்தனைகள்

ஆசிரியர் : சலுப்பை கி. பாஷ்யம்

அளவு : கிரவுன், பக்கங்கள் 120, விலை ரூ.40

வெளியீடு : அக்டோபர் 2005, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 600 005.

சலுப்பை கி. பாஷ்யம் 25 கட்டுரைகளைச் சேர்த்து ஒரு தொகுப்பாக இந்நூலை ஆக்கியுள்ளார். இந்நூலுக்கு வல்லிக்கண்ணன் கொடுத்துள்ள அணிந்துரை இந்நூலின் முக்கியத்துவத்தைச் சிறப்பாக விவரிக்கிறது. அது வருமாறு

நாகரீக வளர்ச்சியும், அறிவியல் முன்னேற்றமும், மனித வாழ்வில் பல வசதிகளைச் சேர்த்துள்ளன. அதே சமயம் பல தீமைகளையும் கோளாறுகளையும் தந்துள்ளன. மனிதர்கள் இயற்கையைப் புறக்கணிக்கலானார்கள். அறிவியல் வளர்ச்சி ஆன்மீக வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளது. அதனால் மனிதர்கள் அமைதியையும், ஆனந்தத்தையும் இழந்து, இயந்திர ரீதியில் வாழ நேரிட்டிருக்கிறது. சுவாசிக்கும் காற்றும், பருகும் நீரும், உண்ணும் உணவும் நஞ்சாக மாறிக் கொண்டிருக் கின்றன. மனிதர்கள் மீண்டும் அமைதியோடும், ஆனந்தத்தோடும் வளமான வாழ்க்கை வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

இத்தகைய முக்கியப் பிரச்சினைகள் குறித்து, சிந்தித்து சலுப்பை. கி. பாஷ்யம் பயனுள்ள ஆலோசனைகளை நல்ல கட்டுரைகளாக அமைத்திருக்கிறார். இயற்கையோடு இயைந்த வாழ்வை மீண்டும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயற்கையான எளிமையான வாழ்க்கை மனித குலத்துக்கு நன்மை புரியும். நம் உணவுப் பழக்கங்கள் நமக்கு நோயற்ற வாழ்வையும் நீண்ட ஆயுளையும் அளிக்கக் கூடும் என்று அவர் தெளிவான முறையில் படிப்பவர் மனதில் பதியும்படி நன்கு விளக்கியுள்ளார்.

மனிதர்கள் நலமுற வாழவும், வாழ்வில் முன்னேறவும் அவசியமான கருத்துக்களை இக்கட்டுரைகள் வலியுறுத்துகின்றன. இவ்விதமாக வாழ்வின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆழ்ந்து - சிந்தித்து, பயனுள்ள நல்ல எண்ணங்களை சலுப்பை கி. பாஷ்யம் இக்கட்டுரைகளில் எடுத்துச் சொல்கிறார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஒலிக்கட்டுப்பாடு, புகைப்பதால் வரும் கேடுகள், ஆரோக்கியமான உணவு, மது விலக்கு, குளிர்பானங்களாலேற்படும் தீமைகள், காந்தி வழி, அறிவியலும் - ஆன்மீகமும், மத நல்லிணக்கம், பெண்களுக்கான வாழ்க்கை உரிமைகள் முதலிய சகலவிதமான பிரச்சினைகளையும் ஆசிரியர் ஆராய்ந்திருக்கிறார். அவர் குறிப்பிடுகிற அறிஞர்களின் மேற்கோள்களும், தகவல்களும், அவரது ஆழ்ந்த படிப்பையும், சிந்திக்கும் திறனையும் புலப்படுத்துகின்றன. ஆசிரியரின் ஆற்றலும், உழைப்பும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

❀ ❀ ❀

# பன்னிரு நாடு அரசுகளின் அரசர் பன்னிரு குடுமிகள்
## தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய தெய்வச் சிலையார் கூற்று

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய தெய்வச் சிலையார் கூற்று குடுமி, குடுமிச்சி, குடும்மி, குடும்பி, குடும்பியர், குடும்பிச்சி, குடும்பர், குடும்பன், குடும்பிகன், குடும்பிய குலம் போன்ற பெயர்ச் சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சொற்கள் மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர்களின் ஒரு பெயர் ஆகும். இச்சொற்கள் பெரிய அரசர்களையும் குறுநில அரசர்களையும் குறிக்கும் சொற்களாகும். அதாவது பேரரசர்களும் குறுநில அரசர்களும் குடும்பிய குலத்தர், அதாவது மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தவர் என்று சொல்லப்படுகிறது.

தமிழ்நாடு தொல்லியல் துறை ஒரு தவறான கருத்தை கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு எனும் நூலில் குறிப்பிட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல தொல்லியல் கல்வெட்டுச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் அத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்நிலையில் தேனி மாவட்டம் செயமங்கலம் காந்தி காந்திஜி நகரில் உள்ள மள்ளர் முன்னேற்றப் பேராயம் தலைவர் திரு. கீர்த்தி பாண்டிய மள்ளர், தொல்காப்பியத்திற்கு தெய்வச் சிலையார் எழுதிய உரையில் பன்னிரு குடுமிகள் பன்னிரு நாடுகளின் குறுநில அரசர்களாக இருந்தது பற்றிய குறிப்பை மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தமது ஒப்பியின் மொழி நூலில் பண்டைத் தமிழகம் என்னும் பகுதியில் (பக்கம் 25) எடுத்துக்காட்டியுள்ளதை எமக்கு சிராக்ஸ் நகல் எடுத்து அனுப்பியுள்ளார். இந்தச் சான்றையும் தொல்லியல் துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தெய்வச் சிலையார் கூற்று : தேவநேயப் பாவாணர் எடுத்துக்காட்டியவாறு

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலத்து முள்ளோர் தத்தங் குறிப்பினையுடைய திசைச் சொல்லாகிய சொல் என்றவாறு.

பன்னிரு நிலமாவன வையையாற்றின் ... நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, கருங்குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலாடு, அருவாநாடு, அருவா வடதலை என்ப. இவை செந்தமிழ் நாட்டகத்த செந்தமிழ் (சேர்ந்த) நாடென்றமையால், பிறநாடாகல் வேண்டுமென்பார் எடுத்துக்காட்டுமாறு : "கன்னித் தென்கரைக் கடற் பழந்தீபம் கொல்லம் கூபகம் சிங்கள மென்னும் எல்லையின் புறத்தவும், கன்னடம் வடுகம் கலிங்கம் தெலிங்கம் கொங்கணம் துளுவம் குடகம் குன்றகம் என்பன குடபாலிரு புறச்சையத் துடனுறைபுகூறுந் தமிழ்திரி நிலங்களும், முடியுடையவரிடு நிலவாட்சியின் அரசு மேம்பட்ட குறுநிலக் குடுமிகள் பதின்மரும் உடனிருப்பிருவருவாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிரு தேயத்தினும், தமிழ்ச் சொல்லாதற்கு விருப்புடையன" என்றமையானும், "தமிழ்கூறும் நல்லுலகத்து.... பொருளும் நாடி" என நிறுத்துப் பின்னுஞ் "செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு" என ஓதியவதனாற் சிவணிய நிலமாவது எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுதலானும், பன்னிரு நிலமாவன:

குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும் கொல்லமும் கூபகமும் சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமும் துளுவமும் குடகமும் குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும் வடுகும் தெலிங்கும் கலிங்கமும் என்று கொள்ளப்படும்.

அரசு மேம்பட்ட குறுநிலக் குடுமிகள் பதின்மரும் உடனிருப்பிருவருமாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிரு தேயத்தினும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும். குடுமிகள் குறுநில அரசர்கள் என்பது முடியுடை வேந்தர்க்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதும் பெறப்படுகிறது. குடுமிகள் ஒரு இனம், ஒரு குலம் என்பது இலக்கியச் சான்றுகளாலும் கல்வெட்டுச் சான்றுகளாலும் பல இடங்களில் ஏற்கனவே வேறு கட்டுரைகளில் மள்ளர் மலரில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ❁ ❁ ❁

## ஈழத் தமிழர் விடுதலைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் தமிழர் மீட்புக்களம் பங்கேற்பு

ஈழத்தில் தமிழர்க்கு எதிராக சிங்களப் பேரினவாத அரசின் அடக்கு முறைகளையும் அக்கிரமங்களையும் எதிர்த்து திருநெல்வேலியில் 16.6.2006 அன்று மள்ளர் மீட்புக் களம், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள்,



மூவேந்தர் முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் மள்ளர் மீட்புக் களத்தினர் பெருமளவில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

# அன்புள்ள ஆசிரியருக்கு

ப. சிவக்குமார் 20.05.06
சிட்டி எலெக்ட்ரானிக்ஸ்,
லட்சுமணங்குடி - 614 102.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

மள்ளர் மலர் கிடைத்தது. நன்றி. தேவேந்திரர்களை தி.மு.க., அ.தி.மு.க., கம்யூனிஸ்டுகள் போன்ற இயக்கங்களில் இருந்து மீட்பதற்கான வழி என்ன? ஆட்சி, அதிகாரங்களில் நமக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைத்துவிட்டதா?

மள்ளர்களின் வாக்கு வங்கியை பலப்படுத்த வேண்டும். ரிசர்வ் தொகுதிகளில் மட்டும் வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் அடிமைத்தனம் மாற வேண்டும். தேவேந்திரர் ஓட்டு தேவேந்திரருக்கே என்ற நிலையை உருவாக்க வேண்டும். அரசியல் ரீதியாக நம்மை மட்டும் ஒடுக்க முயற்சி நடக்கிறது. கருணாநிதியின் அரசியல் தீண்டாமைக்கு முடிவு கட்ட வேண்டும். ஜெயலலிதாவின் சாதி அரசியலை முறியடிக்க வேண்டும். நமக்கான அரசியல் நமக்கு விடுதலையைப் பெற்றுத் தரும். நன்றி.

ப. சிவக்குமார்

❁ ❁ ❁

கவிச்சிற்பி காற்று 13.6.06
டாடாபாத், கோவை - 12

அன்புடையீர்,

வணக்கம்! மள்ளர் மலர் வந்தது. மறைக்கப்பட்ட வரலாற்றைத் திருத்தி வைக்க, இழந்துவிட்ட தமிழ்ப்பெருமை மீட்டெடுக்க, தெளிவான துணிவோடு, தெள்ளுதமிழ்ப் பற்றோடு, தேடியெடுத்துச் செய்திகளைத் தரும் மள்ளர் மலர் ஒரு வரலாற்றுப் பேழையாக மிளிர்கின்றது. செங்கோட்டுப் பள்ளு சொல்லவொண்ணாச் சுவை! சொக்க வைக்கும் நடை! மீண்டும் மீண்டும் பாடிப் பார்க்கிறேன்.

நன்றிகளோடு, தமிழுடன்
கவிச்சிற்பி காற்று

❁ ❁ ❁

சலுப்பை. கி. பாஷ்யம், எம்.ஏ., பி.எட்., 16.6.2006
சலுப்பை அஞ்சல், மீன்சுருட்டி வழி,
பெரம்பலூர் மாவட்டம் - 612 903.

அன்புள்ள ஆசிரியருக்கு!

ஒரே கல்வி முறை (ம. முருகேசன்) கட்டுரை அருமை. தாய்மொழிக் கல்வியால்தான் சுயசிந்தனையும், கண்டுபிடித்து மாற்றமும் வளருமென அண்ணல் காந்தியடிகள் உள்ளிட்டோர் கூறியுள்ளனர். ஆங்கிலேயர் போனபின்பும் ஆதிக்கத்திலுள்ள ஆங்கிலம் சர்வாதசத் தொடர்புகளுக்காகவும், வேலைவாய்ப்புகளுக்கும் இணைப்பாக ஆங்கிலம் உதவுகிறது. விருப்ப மொழியாகக் கற்கலாம். ஆனால் புரியாத வகையில் மனன முறையில் ஆங்கில வழிக் கற்கின்றனர். மெட்ரிக் முறையில் பாடங்கள் திணிக்கப்படுகிறதே தவிர தேவைக்கேற்ப அளிக்கப்படுவதில்லை. இது தற்சார்பை அளிக்கவில்லை. மாணவரின் ஆற்றலை அளவிட ஒரேவிதமான கல்வி முறையே தேவை.

அன்புடன்
சலுப்பை கி. பாஷ்யம்

❁ ❁ ❁

தங்க. சங்கர பாண்டியன் 17.6.06
71/1 - அ11, மணலிப்புதுநகர்,
சென்னை - 600 103.

அன்புடையீர், வணக்கம்.

மள்ளர் மலர் 2006 ஜுன் இதழ் கண்டேன். இதர பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு - தங்கள் தலையங்கம் மிகச் சரியாக எழுதப்பட்டதாகும். தாங்கள் குறிப்பிட்டுள்ளதைப் போன்று இதனைத் தள்ளிப் போடாமல் அதற்கான அவசர சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து உடனடியாக அமுல்படுத்திட வேண்டும். வழக்குரைஞர் ம. முருகேசன் எழுதிய ஒரே கல்வி முறை கட்டுரை சிறப்புடன் விளங்கியது. சிறுதொழில் முறையின் சிறப்புகள் பேராசிரியர் ப. கனகசபாபதியின் கட்டுரையும் வெகு அருமை.

அன்புடன்
தங்க. சங்கர பாண்டியன்

❁ ❁ ❁

தி.நா. அறிவரசு, 17.6.2006
மகாலட்சுமி நகர், பல்லடம் (அஞ்சல்),
கோவை.

"Science has created wonders for the human beings"

அன்புகெழுமிய டாக்டர் குருசாமி சித்தருக்கு வணக்கம். தங்கள் சூன் மாத மள்ளர் மலர் கிடைத்தது. மிக்க நன்றி. ஊடகங்களின் பார்ப்பன ஆட்சியை தெளிவாக படம்பிடித்துள்ளீர்கள். இந்த விவரங்களை அறியாத மக்கள் தான் பெரும்பான்மையாக உள்ளனர். இடஒதுக்கீடு கட்டுரை சிறப்பாக உள்ளது. ஆங்கில கல்வி பணக்காரர்களால் பாதுகாக்கப்படுகிறது.

இப்படிக்கு
தி.நா. அறிவரசு

❁ ❁ ❁

**மள்ளர் மலர் சந்தா**
**ஆண்டுக் கட்டணம் ரூ 120/-**

**பொள்ளாச்சி நசன்** 24.6.06
பொள்ளாச்சி - 642 006.

அன்புடையீர், வணக்கம்.

மள்ளர் மலர் வரலாறு காட்டும் உயரிய இதழாக உள்ளது. கல்வெட்டு, செப்பேடுகளில் இருந்து சான்றாதாரங்களைக் காட்டி, வரலாறு படைப்பது - பின்வரும் தலைமுறையினருக்கு உதவுவது. ஒரே கல்வி முறை - என்ற கட்டுரை மிகவும் அருமை. ம. முருகேசன் அவர்களது செயற்பாடு, சிந்தனை - கல்வி பற்றிய நுட்பம் பாராட்டிற்குரியது. அவர் கல்வி பற்றி இயங்க ஊக்குவிக்கவும்.

அன்புடன்,
**பொள்ளாச்சி நசன்**

❁ ❁ ❁

**அ. கீர்த்திபாண்டிய மள்ளர்** 25.6.2006
மள்ளர் முன்னேற்றப் பேராயம்
(அரசியல் சார்பு அற்ற மூவேந்தர் எழுச்சிப் பிரச்சார இயக்கம்)

அன்பார்ந்த டாக்டர் ஐயா அவர்களுக்கு,

ஜெயமங்கலம் அ. கீர்த்திபாண்டிய மள்ளர் வணக்கமுடன் எழுதிக் கொள்வது.

தங்களின் வழிகாட்டுதலின் பேரில், நமது மரபுப் பெயர் மள்ளரை திரும்ப மீட்டெடுக்க வேண்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமூகத்திற்கு, ஜெயமங்கலம், சிந்துவம்பட்டி, கணவாய்பட்டி, கட்டக்காமன்பட்டி, வி. குரும்பபட்டி, எழுவனம்பட்டி, பெரியகுளம், வெறியப்பநாயக்கன்பட்டி, பழைய வத்தலகுண்டு ஆகிய ஊர்களின் தேவேந்திர குல வேளாளர் நிர்வாகிகள் மூலம் கோரிக்கை அனுப்பப்பட்டு உள்ளது. இதே கோரிக்கை விண்ணப்பத்தை நமது மள்ளர் மலரில் வெளியிட்டு, தமிழகத்தின் அனைத்து ஊர் தேவேந்திர மள்ளர்களும் அனுப்ப ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

பள்ளன் என்ற பெயர் அரசிதழில் இருக்கும் வரை நமது மக்களை ஒற்றுமைப்படுத்த இயலாது. ஏனென்றால் பள்ளன் என்ற பெயருக்கு, தனக்குள் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள். பிற இனத்தவருக்காக கடுமையாக உழைப்பார்கள். (மேலும் எழுத்தில் எழுத முடியாத சில செயல்கள் நடக்கும்) அதனால் முதலில் இழிவு தரும் பெயரிலிருந்து விடுபட்டு, பின்பு எஸ்.சி. பட்டியலிலிருந்து வெளிவருவோம். மள்ளர் எப்போதும் பல்வேறு செல்வங்களாலும், பல்வேறு மனிதர்களாலும் சூழப்பட்டு இருப்பர். (அதிர்ஸ்ட்ட விஞ்ஞானம் - எண்கணித புத்தகம் - எண்கணித மேதை சேதுராமன்)

எனவே கேட்டது கிடைக்கும் மந்திரப் பெயர் மள்ளரை திரும்பப் பெற ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இவண்
**அ. கீர்த்திபாண்டிய மள்ளர்**

❁ ❁ ❁

## திருமண வாழ்த்துக்கள்

**திருவளர் மள்ளர் அ. வேலுமணி, டி.எப்.டி.,**
**திருவளர் மள்ளி பெ. வேல்விழி, எம்.சி.ஏ.,**
**14.6.2006**

ஈரோடு மாவட்டம் ஈரோடு இராமநாதபுரம் புதூர், சூரியம்பாளையம் சிறப்பு சிற்றூராட்சி சேர்மன் பஞ்சாலை **பி.ஏ. பெரியசாமி தேவேந்திரர் - திருமதி பவுனாயாள் பண்ணாடிச்சி** குமாரத்தி **வேல்விழிக்கும்** கோவை மாவட்டம், கோயில்பாளையம் **தெய்வத்திரு அம்மாசை தேவேந்திரர் - திருமதி காளியாத்தாள் பண்ணாடிச்சி** குமாரர் **வேலுமணிக்கும்** 14.6.2006 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ஈரோடு அசோகபுரத்தில் திருமண வரவேற்பு நடைபெற்றது. ஏராளமான கட்சி பிரமுகர்களும், உறவினர்களும், நண்பர்களும் மணமக்களை வாழ்த்தினர். தேவேந்திர குல வேளாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தரும், தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்ற பொருளாளர் இஞ்ஜினியர் முனைவர் கு. மாரியப்பன் அவர்களும் நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினர்.

❁ ❁ ❁

**திருவளர் மள்ளர் க. புகழேந்திர குமார், டி.இ.சி.இ.,**
**திருவளர் மள்ளி த. நித்தியா, எம்.ஏ.,**
**28.6.2006**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், அடஞ்சூர் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் **ர. கணேசன் தேவேந்திரர் - திருமதி கலைச்செல்வி மள்ளத்தியார்** குமாரர் **புகழேந்திரகுமாருக்கும்,** தஞ்சாவூர் வட்டம் கீழவாசல் பாலோபா நந்தவனம் **ச. தமிழரசன் தேவேந்திரர் - திருமதி த. தமிழரசி மள்ளத்தியார்** குமாரத்தி **த. நித்தியாவுக்கும்** 28.6.2006 அன்று தஞ்சாவூர் தீர்க்க சுமங்கலி திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளான உறவினர்களும் நண்பர்களும் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தி அருளினர். மணமக்களுக்கு மள்ளர் மலரின் வாழ்த்துக்கள்.

❁ ❁ ❁

## 60 வயது நிறைவு மணி விழா

**திருவளர் மள்ளர் எஸ். தங்கவேலு**
**திருவளர் மள்ளி மனோகரி தங்கவேலு**

25.6.2006 அன்று சென்னை வளசரவாக்கம் ஸ்டேட் பாங்க் காலனி, தங்கள் வீட்டில் தொலைத் தொடர்புத் துறை பொறியாளர் **திரு. எஸ். தங்கவேலு பலகனாருக்கும், திருமதி மனோகரி தங்கவேலு மள்ளத்தியாருக்கும்** 60-வயது நிறைவு மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. திரளான உறவினர்களும், நண்பர்களும், அதிகாரிகளும் விழாவிற்கு வந்திருந்து வாழ்த்தினர். மகன் அருண்குமார் பி.இ., மகள் சசிகலா எம்.எஸ்சி., பி.எட்., மருமகள் ராணி பி.காம்., மருமகன் பி. சுதாகர் பி.இ., ஆகியோர் மணி விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினர்.

❁ ❁ ❁

# செங்கோட்டுப் பள்ளு

சென்ற இதழ் தொடர்ச்சி:

சமயச் சண்டையில் பேரூர்ப் பட்டீசுவர் மள்ளர்-பள்ளர் என்கிற செய்தி சொல்லப்படுகிறது. இருவருக்கிடையிலான சண்டையை அவர்களுக்கு நல்ல புத்தி அருளி முடித்து வைககிறார் செங்கோட்டு ஈசுவரன் மள்ளியர் இருவரும் சமாதானமாகி ஒருவரை ஒருவர் அன்பு பாராட்டிக் கொள்கின்றனர். மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குலப் பெண்கள் கும்மியடித்து இதைக் கொண்டாடி மகிழ்கின்றனர். நூலாசிரியர் மங்கலம் பாடி செங்கோட்டுப் பள்ளை நிறைவு செய்கின்றார்

தாமமிகு மாமனென்றும் பாராம லே -- முன்பு
தக்கனைவ தைத்தசிவ சம்புவல்ல வோ 867
ஆமடியோ அவர்தானோ மாமனைக்கொன் றார் -- உங்கள்
ஆண்டவனு மாமனைமுன் கொல்லவில்லை யோ 868
சிவனும்ஆ ரூரருக்குத் தூதனென வே -- முன்பு
தேவதாசி யாள்மனைக்குச் செல்லவில்லை யோ 869
அவர்தானா தூதுசென்றார் தாசிமனைக் கு -- உங்கள்
ஆண்டவனுந் தூதுசென்ற தாரறியா ரோ 870
பக்கமொரு பெண்ணிருக்க உங்களாண்டவர் -- ஒரு
பைங்கொடியைத் தன்சிரசில் தான்சுமந்தா ரோ! 871
ஒக்கவொரு பெண்ணிருக்க உங்கள் ஆண்டவர் -- ஒரு
ஒண்டொடியை தன்சிரசில் தான்சுமந்தாரே 872
சங்கரனார் என்றுதிரு நாமம் படைத் து -- எங்கள்
தாசருட நெற்றியிலே தானிருந்தாரே 873
அங்கவருஞ் சங்கரரென் றாண்டியிடத் தில் -- வெண்ணீ
றாகவும் உகந்துபடுத் தாரடிபள் ளி 874
அன்றுபிரமச் சாரியென்று பேருமெடுத்தே -- பெண்கள்
ஆசைகொண்ட கர்த்தன்உங்கள் ஈசனல்ல வோ 875
என்றும்பிரமச் சாரியென்று நாமம்படைத் தே -- பெண்கள்
எண்ணளவி லாதணைந்த கண்ணனல்ல வோ 876
அந்நாளிலிலே பிரமகத்தி தானும்பிடித் தே -- பித்த
னாகவுந்தி ரிந்தலைந்தார் பேய்களுட னே 877
முன்னாளிலே பிரமகத்தி தானும்பிடித் தே -- கோர
முரகரி யாகியமு ராரியல்ல வோ 878
அம்பலந்த னிலேபத்ர காளியுட னே -- உங்கள்
ஆண்டவன் திருநடன மேபுரிந்தா ரே 879
வம்பெனவும் காளிங்க மர்த்தனமெ ன -- பாம்பின்
மணிமுடி மேல்நடித்த மாயனல்ல வோ 880
இருக்கவுந் தானிடங்க ளில்லாம லே -- உங்கள்
இறைவனும் ஆலடியி லேயிருந்தா ரே 881
பருக்கப் பிழைத்தவர் படுக்கஇட மில் -- லாமல்
பண்பொடுஅவ் வாலிலையில் பள்ளிகொண்டாரே 882
கட்செவித ரித்திருந்துங் காணாம லே -- வந்த
கடல்விட முண்டநீல கண்டனல்ல வோ 883
நச்சுவிட முண்டதினால் மாயன்பிழைத் தார் -- உங்கள்
நாதனும் பூதகிவிடந் தானுமுண்டா ரே 884
பிச்சையெடுத் தெச்சில்தின்றும் போதாம லே -- சிறு
பிள்ளைக்கறி யுகந்தபிஞ் ஞகனல்ல வோ 885
இச்சகத்தி லேயிரந் தெச்சிலைத் தின் று -- வெறி
எடுத்து நிணத்தையுண்ட தாரறியா ரோ 886
வாகன மில்லையொரு காளையொழி ய -- ஒடு
மண்ணுடையான் வீட்டினில்தி ருடினார்போடி 887
ஆகமகிழ் வாயதனை மேய்த்துமிடை யர் -- மனை
யாடையைத்தி ருடினது நாடறியா தோ 888
தென்னிலங்கை ராவணர்க்குப் பெண்ணைக்கொடுத் து -- பின்பு
செட்டிப்பெண்ணுக் காசைக்கொடை சிவனல்ல வோ 889
முன்னுமாசைப் பட்டிருளில் பின்னுமெடுத் தான் -- நடை
மூட்டிவந்தி டைச்சியர்க்கு மோகங்கொண்டா ரே 890
ஆடையாப ரணமுஞ்சு கந்தமில்லா மல் -- சாம்ப
லாண்டியாய் அரவணிந்து தோலையுடுத் தார் 891
வாடையும் பணியுமந்தத் தோலுமில்லா மல் -- குடல்
மாலையிட்டு மண்ணணிந்து மரவுரிபெற் றார் 892
மருகன் தனைவதைத்தும் ரவிமறைத் தும் -- கொண்ட
மனைவியை விட்டரன்ம லையிலிருந் தார் 893
மருகன் தனைமடித்தும் ரவிமறைத் தும் -- முன்பு
மனைவியை விட்டரிவ னத்திலிருந் தார் 894
பவளசெட்டி யாகியுந்தன் பெண்ணைமயக் கிப் -- பின்பு
பாரிசெய்து சிவனிடப் பாகந்தந்தா ரே 895
கவளமென்று வந்தபெண்ணை வெட்கிடச்செய்து -- உங்கள்
கர்த்தனும்பெண் ணெடுத்துரம் வைத்திடலை யோ 896
மாடெடுக்கும் புலியூரில் தானுமிருந் து -- பிர
மத்தனென்றும் வேடனென்றுஞ் சித்துமானா ரே 897
ஆடெடுத்துத் தேடினஇ டையனல்ல வோ -- மாயன்
ஆயர்பாடி யில்சித்துவி ளையாட லையோ 898

### பேரூர் பட்டீசுர மள்ளர்

பிட்டுக்காக ஒட்டனென்று வேடமெடுத் தே -- பின்பு
**பேரூருப் பள்ளனான பெருமானன் றோ** 899
மட்டளவில் லாதகல்லு மண்ணுஞ்சுமந் து -- 'பல
வான்' எனவும் பள்ளிகொண்ட மாயனல் லவோ 900
ரட்சிக்குந் தொழில்படைத்தார் எங்கள் ஆண்டவர் -- சிவன்
நமனை மடித்துநம னாகினார்போ டி 901
அட்சய வரங்களீவர் எங்களாண்ட வர் -- அதை
அழிக்கப் பிறந்தவருன் ஆண்டவரல் லோ 902

### வேறு

கொண்டவனுக் கடங்காத வண்டியென வே -- ஊரில்
கண்டவர்சி ரிக்கலையோ குண்டுணிபோ டி 903
சொக்கிடப்புருஷனையுன் கைக்குளடக் கிச் -- சரியாய்

வெட்கமில்லா மல்பேசுறாய் சக்களத்தி நீ 904

மொண்ணைச்சிதன் வீட்டிலேபோய் வெண்ணெய்திரு டி – நானும்
கண்ணிலேகா ணேனெனவும் நிண்ணயஞ்செய் தாய் 905

வெத்திலைப்பெட் டியிலொரு கத்தையெடுத் து -- நானும்
சுத்தமாய றியேனென்று சத்தியஞ்செய் தாய் 906

என்கணவன் உன்கிட்டத் தானும்வராட் டால் -- என்மேல்
ஏனெரிஞ்சு சாகிறாய்போ நானென்னசெய் வேன் 907

வீட்டினில்பள்ளனை வைத்து ஆட்டங்கொள்ளு றாய் -- இந்தப்
போட்டிகள்போ மோயிருவெள் ளாட்டிபார டி 908

### 66. அரனார் மள்ளியர் இருவருக்கும் அருள் புரிதல்

எண்சீர் விருத்தம்

சர்ப்பகிரி மேவுமரன் இருவர் செய்கை
தாமறிந்து நமதுபண்ணை தனிலி ருப்போர்
இப்படியெந் நாளுமிச லாட்ட மாக
இருப்பதுதான் அடைவலவென் றிரங்கி நாதன்
நற்பொறுமை புத்தியும்நல் லொழுக்கஞ் செய்கை
நலமுடனே இருவருக்குந் தோற்றி வைத்தார்
அப்பொழுதே சற்குணமா யிளைய பள்ளி
அரிவைசெங்குன் றூர்மயிலோ டன்பு கூர்ந்தாள் 909

### 67. சங்களத்தியர் சிவகாமி மள்ளத்தியும் அபிராமி மள்ளத்தியும் சமாதானம் அடைதல்

சிந்து

அபிராமி மள்ளத்தியார்

இளையபள்ளி யுந்தானி ளகியினி மேல் -- என்றும்
இருவருமொத் துடன்பட்டி ருப்போமென் றெண்ணி
பழையபகைவிட் டிருவர் கூடிவாழ்க வே -- மூத்த
பள்ளிமுகம் பார்த்திவள் பரிவுடன் சொல்வாள் 910

இப்படிப்போ ராடிமுடிய நாமுமிருந் தால் -- அக்கா
ஏதுபலன் பார்த்தவர்க்கி கழ்ச்சியல்ல வோ
அப்படியா காதுன்சொல்ப டிநடக்குறேன் -- இருவர்
அன்புடன் கணவருடன் கூடியிருப் போம் 911

## மாமள்ளர் இராசராச சோழர் சிலையை தஞ்சைப் பெரிய கோயிலுக்குள் வைக்கக் கோரி உண்ணாவிரதம்

மக்கள் தமிழகம் கட்சியின் தலைவர் புரட்சி கவிதாசன் தலைமையில் 23.6.2006 அன்று திருச்சி மேலசிந்தாமணி அண்ணாசிலை அருகில் மாமள்ளர் இராசராச சோழர் சிலையைத் தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலுக்குள் வைக்கக் கோரி ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. தமிழக அரசுக்கு, மத்திய அரசுக்கும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஏராளமான பொதுமக்களும், தேவேந்திரர் பெருமக்களும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டனர்.

சிவகாமி மள்ளத்தியார்

இத்தனைநா ளாச்சுதோஉன் புத்திவர வும் -- என்னை
ஏசியும்பே சியுஞ்சின்ன மேசெய்த பின்பு
சுற்றியுள்ள பேர்நகைக்கத் தானுங்கூடி யே -- பின்னுந்
தூஷணஞ்செய் தென்னதோத கம்நீசெய்வா யோ 912

அபிராமி மள்ளத்தியார்

இனிநிந்தை வாராதெவ ரேன்சிரிக்கி றார் -- பேதை
ஏளிதப்புத் தியில்செய்த தெல்லாம்பொறுத் தாள்
சனியன்கொடு மையால்வந்த தாழ்விதுஅக் கா -- உன்னைத்
தாயென்றெண்ணி னேன்பிறந்த தங்கையென்றெண் ணே 913

சிவகாமி மள்ளத்தியார்

பேதகமென் னடி என்னால் பேதகமில் லை -- உந்தன்
பேச்சதையு றுதிகொள்ளப் பேணிலைம னம் 914

அபிராமி மள்ளத்தியார்

ஏதடியக் காயென்சொல்பு ணிக்கையில்லை யோ -- கோதை
எம்பிரான றியநிசம் நம்பிக்கையி தே 915

சிவகாமி மள்ளத்தியார்

இந்தவார்த்தை முன்னாளிலி ருந்ததானால் -- இருவர்க்(கு)
இத்தனை பொல்லாப் புவருமோ சீரங்கவல்லி 916

அபிராமி மள்ளத்தியார்

உந்தன்நிலை யெண்ணிடாத கந்தைகள்செய் தேன் -- நிந்தை
ஒன்றையும னதில்வைத்தி டாதேநீயக் கா 917

சிவகாமி மள்ளத்தியார்

நல்லதடி நீயும்பொறு நானும்பொறுத் தேன் -- கொண்ட
நாயகரு டன்கூடிநன் றாகயிருப் போம் 918

அபிராமி மள்ளத்தியார்

இல்லமும்பி ழைப்பிருப்ப தெல்லாமுன தே -- நீயும்
இட்டவேலை செய்வேன் வேலை யென்னசொல்லக் கா 919

சிவகாமி மள்ளத்தியார்

என்னுடபி றப்போஇது எல்லாமுன தே -- என்னை
எசமானி யாகவைத்தி ருந்தாலேபோ தும் 920

அபிராமி மள்ளத்தியார்

உன்னுடசொல் படியுமீ றாமல்நடப் பேன் -- என
உறவுகொண் டேயிருவ ருளமகிழ்ந் தார் 921

செங்குடவர் அருளால் மள்ளியர் மகிழ்ச்சி

கலிப்பா

கண்ணுதலெங் கண்ணருஞ்செங் கண்ணரெனு முற்சமயத்
தண்ணல்வடி வானசெங்குன் றண்ணல்பண்ணைப் பள்ளியர்கள்
அண்ணசலரு ளாலிருவர் அண்ணுறவ தாகியுமுக்
கண்ணரைப்பு கழ்ந்துகயல் கண்ணியர்நின் றாடலுற்றார் 922

### 68. குடும்பர் குலப் பெண்மணிகளின் கொண்டாட்டம்

கும்மி

காரணக் கோதைய ரனடி யாள் -- சிவ
காமிப் பள்ளியி லக்குமி சேர்

செங்கோட்டுப் பள்ளு

நாரண ருக்குஅ டிமையதான சீ
ரங்கப் பள்ளியிருவோ ரும்
ஆரணி வேணித னைப்பணிந்தே -- கும்மி
அடித்தி வர்விளை யாடவுமே
பூரண மாயழ குங்கன ரஞ்சித
பெண்களைத் தானழைத்திங்கித மாய் 923

ஆச்சியம் மா யடி பேச்சியம் மா -- அழ
காயிப்பெண் ணே திரு வாயிப்பெண் ணே
நாச்சிமுத் தே விசா லாட்சிமுத் தே – எல்லாம்
நடந்து கும்மி யடியுங்கடி -- பெண்கள்
தொடர்ந்து கும்மி யடியுங்கடி 924

நஞ்சிமுத்தே அப ர ஞ்சி முத்தே -- அடி
நாகமணி அனு ராகமணி
குஞ்சிப்பெண் ணே சின்ன வஞ்சிப்பெண் ணே – எல்லாம்
கூடிக் கும்மி யடியுங்கடி -- சிந்து
பாடிக் கும்மி யடியுங்கடி 925

சின்னிப்பெண் ணே பசும் பொன்னிப்பெண் ணே – அடி
செங்க மலை வளர் தங்கமலை
அன்னமுத் தே யிளங் கன்னிமுத் தே – நன்றாய்
அலுக்கிக் கும்மி யடியுங்கடி -- பெண்கள்
குலுக்கிக் கும்மி யடியுங்கடி 926

அங்கமுத் தே பசுந் தங்கமுத் தே -- அருக்
காணிமுத் தே **அமி** ராணிமுத் தே
மங்கைப்பெண் ணே குண ரங்கப்பெண் ணே – எல்லாம்
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி – நன்றாய்ப்
புகழ்ந்து கும்மி யடியுங்கடி 927

அர்த்த நாரீசு ரதேவ ரும் – என்
அம்மைபா கம்பிரி யாத வளும்
சித்தமி ரங்கிட வே ஒயி லாகவும்
சேர்ந்து கும்மி யடியுங்கடி -- லாகு
பாய்ந்து கும்மி யடியுங்கடி 928

கொற்றவனார் பழ னித்துரை யும் -- அரி
கோவிந்தர் சீரங்க நாயக ரும்
வித்தக னாரிவர் நற்றய வாக வும்
வேண்டிக் கும்மி யடியுங்கடி -- பெண்கள்
தாண்டிக் கும்மி யடியுங்கடி
தந்தினத்தானதா – நன்னானே -- தனந்
தந்தினத்தானதா – நன்னானே 929



### 69. மங்கலம்

பல்லவி

அர்த்தநா ரீசுரர்க்குச் செயமங்க லம் – எங்கள்
அரவகிரி வாசருக்குச் சுபமங்கலம்

சரணங்கள்

கர்த்தனான சித்தனுக் குக்
காளமி டற்றனக்கு
வித்தகவி சுத்தனுக்கு
வேயீன்ற முத்தனுக் கு -- (அர்த்தநா)

ஓம்நமசி வாயனுக் கு
உமையவள் நேயனுக் கு
வானவர்ச காயனுக் கு
வளர்கயி லாயனுக் கு -- (அர்த்தநா)

தெண்டாயுதக் கையனுக் குச்
திருச்செங்கோட் டையனுக் கு
கொண்டாடன்பர் மெய்யனுக் குக்
கோதையென் னையனுக் கு – (அர்த்தநா)

சீர்பெறுகங் காளனுக் குச்
செங்கமலத் தாளனுக் குப்
பார்வதிம ணாளனுக் கு
பணிமலை யாளனுக் கு
அர்த்தநா ரீசுரர்க்குச்
செயமங்க லம். 930

அறுசீர் விருத்தம்

நாகமா மலையும் வாழி ஞானசிற் பரரும் வாழி
பாகமே பிரியா மெல்லி பரிமள வல்லி வாழி
ஆகமெய்ப் பொருளா னந்த அரனுமை வடிவம் வாழி
நாகமும் நாக நாதர் நற்கயி லாசர் வாழி 931

மங்கலம், ஊமைநகர்,
பொன்னுச்செல்லைய புலவர் இயற்றிய
செங்கோட்டுப்பள்ளு முற்றிற்று

❋ ❋ ❋

## தேவேந்திர இமயம் சரிந்தது
## மறைவு 22.6.2006



திரு. வெ. மாயழகன், பி.இ., அவர்கள், உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியற் துறை, உசிலம்பட்டி

பொறியாளர் வெ. மாயழகன் பி.இ., அவர்கள் சிவகங்கை மாவட்டம், இளையாண்குடி வட்டம், சுந்தனேந்தல் கிராமத்தைச் சார்ந்தவர். மதுரை புதூர் கற்பக நகரில் கடந்த 20 வருடங்களாக வசித்து வருகிறார். மதுரை தேவேந்திர பண்பாட்டுக் கழக அமைப்பின் செயலாளராக 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர். சமூகப் பற்றாளர். மதுரை புதூரில் கம்பீரமாக கட்டப்பட்டுவரும் தேவேந்திரர் திருமண மண்டபம் அமைவதற்கு தூணாக பணியாற்றி வந்தவர். இவருக்கு திருமதி முனியம்மாள் (எ) மாலதி என்ற மனைவி, யுகோ வங்கியில் பணியாற்றி வருகிறார். மகன் பொறியாளர் சதீஸ் குமார் இன்போசிஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இளைய மகன் சுர்சித் குமார் கோவை பொறியியல் கல்லூரியில் 2-ஆம் ஆண்டு படித்து வருகிறார். இவரின் இழப்பு சமூகத்திற்கு பேரிழப்பாகும். குடும்பத்ினருக்கு ஆழ்ந்து இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் : செ.மீ.கு. சிவமணி

# தேவேந்திரர் வரலாறு

## தேவேந்திரர் - மள்ளர் - மல்லர் - பள்ளர் ஒருவரே

- முனைவர் இரா.நாகசாமி
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, இயக்குநர்(ஓய்வு)
22, 22-வது குறுக்குத்தெரு, பெசன்ட் நகர்,சென்னை - 600 090

(மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் **நூற்றாண்டு விழாவின் தொடர் சொற்பொழிவாக தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றத்தில் 11.11.2001 அன்று தென்காசி சிவலார்குளம் தெய்வத்திரு பெஞ்சமின் மள்ளர் என்கிற சிவராஜேந்திர மள்ளர் நினைவு அறக்கட்டளை சார்பாக தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பிதாமகர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு**)

அவைத் தலைவர் அவர்களே பெரியவர் டாக்டர் குருசாமி சித்தர் அவர்களே நண்பர் மாரியப்பன் அவர்களே, கூடியிருக்கும் சான்றோர்களே, நண்பர்களே, என்னுடைய மாணவ சிகாமணிகளே உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்பு அளித்தமைக்காக உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு ஒரு அன்பினாலே, ஆரம்பித்து ஏறத்தாழ ஒரு மூன்று ஆண்டுகளாக குருசாமி சித்தர் அவர்கள் நான் இங்கு வரவேண்டும், பேச வேண்டும் என்று ஆர்வமாக அழைத்து இருந்தார்கள். பல காரணங்களால் வர இயலவில்லை. அதனாலே விடாமல் எப்படியும் வந்துதான் ஆக வேண்டும், பேச வேண்டும் என்று அவர்களும் என்னை அழைத்து இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி.

### உயர்ந்தோர் பள்ளர் என்ற கட்டுரை

நான் இந்தப் பொருள்பற்றி அதிகம் ஆராய்ச்சி செய்தவன் அல்லன். யாரும் என்னை ஆராய்ச்சி செய் என்றும் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய ஆராய்ச்சிலேயே ஏதோ ஒரு நாளைக்கு இதைப் பற்றி எழுத வேண்டும் என்று எண்ணி அதை தினமலர் பத்திரிக்கையில் ஒரு கட்டுரையாக எழுதியிருந்தேன். அது யாருக்காகவும் எழுதியது அல்ல. யாரும் என்னை எழுதச் சொல்லவில்லை. ஆனால் படிக்கின்ற பொழுது எனக்கு வரலாற்றுப் பின்னணியிலே ஏற்பட்ட ஒரு பிரதிபலிப்பாக இருந்த காரணத்தாலே அதை எழுதி ஆசிரியர் அவர்களுக்கும் போட வேண்டும் என்று எழுதியிருந்தேன். நான் எழுதிய போது அதன் தலைப்பு **வரலாற்றில் பள்ளர்** என்றுதான் எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரையைப் பார்த்துவிட்டு அவங்களே **உயர்ந்தோர் பள்ளர்** என்று தலைப்புப் போட வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.

அது போட்டு முடிந்தவுடனே இந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒரு 20 பேர் இருக்கும், அவர்கள் எல்லோரும் என் வீட்டுக்கு வந்து அவர்கள் சொன்ன, காட்டிய அன்பைப் பார்த்து அசந்து விட்டேன். அவ்வளவு அன்போடு ஒரு வரலாற்று நிலையிலே இருந்து இந்த மாதிரி எழுதியதைப் பாராட்டுகிறோம் என்று சொன்னது எனது மனதில் பசுமையாக, அன்பின் பிழம்பாக அப்படியே இருக்கிறது. எனக்குப் பெரிய வீடு என்றும் இல்லை. சாதாரண வீடுதான். எல்லோரும் கீழே சிமெண்ட் தரையில் உட்கார்ந்து கொண்டு பாராட்டினார்கள். அதனுடைய பிரதிபலிப்பாகக் கூட இருக்கும், இப்போது என்னை அழைத்தது என நினைக்கிறேன்.

அது எப்படி ஒரு அன்பினாலே உந்தப்பட்டு என்னை வந்து பார்த்துப் பெருமைப்படுத்தினார்களோ அது மாதிரி வேறு ஒன்றும் கூட வந்தது. நமது நாட்டிலே அது சர்வ சாதாரணம், வெயில் இருந்தால் நிழல் இருக்கிற மாதிரி, நிறைய வந்தது. கல், கல் வந்தது. அந்தக் கல்லைப் படித்துப் பார்த்த பிறகு தான் நம்ம நாட்டிலே எப்படி உயர்வு தாழ்வு மனப்பான்மை எவ்வளவு தூரம் புரைபோய் இருக்கிறது என்பது தெரிகிறது. அப்பொழுது என்னிடம் பொருள் வசதி இல்லை. அந்தக் காலத்திலே ஒரு வழக்காடு மன்றத்திற்குப் போனால், நாம் இருக்கிற பொருளை இழந்து, அந்தக் கடிதங்களை எடுத்துக் கொண்டு ஒரு நீதி மன்றத்திற்குச் சென்றிருந்தேனானால்? அதை எழுதியவர்கள் எனை ஒரு உணர்வோடு பார்த்து, நினைக்கக் கூட முடியாத அளவிற்கு எழுதி இருந்தார்கள். அவ்வளவு மட்டமான புத்தி. என்னைப் பத்தி எழுதி இருந்தால் பரவாயில்லை. எங்கள் இருவரையும் ஒரே சமமாக வைத்திருந்தார்களே எப்படி என்ற ஒரு எண்ணத்தில் எழுதி இருந்தார்கள். அப்புறம் நினைத்தேன், இது சின்னப் புத்தி, இவர்களோடு போய் நாம் மோத வேண்டாம் என்று. இதுலே போய் மோதுவது பெருமை இல்லை.

அதனாலே இது ஒரு நிகழ்வே என்பதற்காகவும் அதனுள்ளே இருக்கிற மனப்பாங்கு எப்படி இருக்கிறது என்பதற்காகவும் சொன்னேன். இதை வரலாற்று நெறியிலிருந்து பார்ப்பதற்காக, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சொல்லக் கூடிய நாட்டிலே ஒரு இடத்தில் ஒன்றைச் சொல்லிவிட்டு வேறு இடத்தில் நான் வேறொன்றை சொன்னால் என்ன நினைப்பார்கள். இதைப் பற்றி நன்றாக ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

எனக்கு இங்கு வந்து பேசுவதில் ஒரு சிறப்பு. நீங்கள் கொடுத்த ஒரு பெரும் வாய்ப்பாக நான் ஏன் கருதுகிறேன்

என்றால் நமது ஆன்றோர்கள் சான்றோர்கள் பலப்பல குடும்பத்தினர்களாக இருந்தாலும் ஒன்றாக இருந்து பிரிந்து அவரவர்கள் தங்களுடைய காலத்தினாலே பிறப்பினாலே பிரிக்கப்பட்டவர்கள். தங்களுடைய மரபிலே சிறு சிறு வேறுபாடுகள் இருந்தால் அந்த மாதிரி வளர்ந்திருக்கக் கூடியது.

### சிவபெருமான் மள்ளர் - பேரூர்

அதிலே சிவபெருமானையே தெய்வமாகக் கொண்டு வழிபடக் கூடிய, தென்னாடுடைய சிவனே போற்றி எனச் சொல்லக் கூடிய இந்த நாட்டிலே சிவபெருமானே மள்ளராகவே, தெய்வமாகவே காட்டிய ஒரு பெரும் பேரூர் இது. யாரோ என்னை, நாம் எந்தப் பரம்பொருளை வழிபடுகிறோமோ அவரே இந்தச் சமுதாயம் என்று சொன்ன ஒரே ஒரு பெரிய ஊர், இந்த ஊர். நம்ம பேரூர் புராணம். அப்படி இருக்கிறபோது நாம் தெய்வம் என்று நம்பி இதையும் மறைவாகச் சொல்லி இருக்கிறபோது நாம் எப்படி ஏறத்தாழ்வு பார்க்க முடியும். ஏற்றத் தாழ்வுக்கு இடமே இல்லை. ஆன்றோர்கள் அப்பப்ப இருந்த செல்வத்தினாலே செல்வச் செழிப்பினாலே, ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு நிறைய பணம் வருகிறது. இன்னொருத்தருக்குக் குறைந்து விடுகிறது. பணம் இருக்கிறவன், தான் உசத்தி என்கிறான், அவன் குறைந்தவன் என்கிறான்.

அது வேறு. ஆனால் பிறப்பினாலே உயர்ந்தது தாழ்ந்தது என்பதற்கு எல்லாம் இங்கே இடமில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காக தெய்வமே, அந்தத் தெய்வம் மட்டும் அல்ல, தெய்வம் என்று யார் யாரை எல்லாம் சொன்னமோ அத்தனையும் அவர் பின்னாலே, இந்தக் குடும்பமாக வந்ததாகத்தான் பேரூர் புராணத்தில் ஒரு படலமே எழுதி இருக்கிறார்கள். ஐயா, புரிந்து கொள்ளுங்கள் தெய்வத் தன்மை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதற்காக எழுதப்பட்ட அற்புதமான ஒரு நூல். அதனால் அதற்கு (ஏற்றதாழ்வுக்கு) இங்கு இடமில்லை என்று தோன்றியது.

### தமிழ் இலக்கியத்தில் மள்ளர் - மல்லர் ஐயமும் மாற்றுக் கருத்தும் இல்லை

நான் குருசாமி சித்தருடைய தமிழ் இலக்கியத்தில் பள்ளர்(மள்ளர்) தேவேந்திர குல வேளாளர் (அடிப்படைச் சான்றுகள்) என்ற நூலை, அவர் முதலிலே ஒன்று அனுப்பினார்கள் அப்புறம் இன்னொரு படி இரண்டாந் தடவை அனுப்பினார்கள். படித்தேன், படித்தபோது வரலாற்று மரபிலே இது இருக்கா, அந்த Critical evaluation-க்கு இது நிற்குமா, தாங்குமா, இந்தப் பேரு (மள்ளர்-மல்லர்) சொல்கிறாரே இது நாம் ஏற்றுக்கொள்ளக் கூடுமா என்றெல்லாம் கொஞ்சம் நுணுக்கமாகப் பார்த்ததோடு இல்லாமல் மற்ற நூல்களிலே இவர் மேற்கோள் காட்டும்போது அந்த நூல்களிலே இவர் சொல்லக்கூடிய சொல் மள்ளர், மல்லர் என்ற சொல் இருக்கா, அல்லது மாறுபட்டு இருக்கிறதா என்றெல்லாம் நான் கொஞ்சம் ஆழமாகப் பல நூல்களையும் ஆய்ந்து ஒப்பிட்டுப் பார்த்து பிறகு, அருமையான ஆராய்ச்சி நூலை எழுதியிருக்கிறார் என்று அவரை மனதாரப் பாராட்டுகிறேன். சாதாரணமாக இந்த மாதிரி எழுதுகிறவர்கள் கொஞ்சம் மிகைபட எழுதுவதும் உண்டு. மிகைபட எழுதுவதைக் கூட நாம் விட்டுவிடலாம். ஆனால் திரித்து எழுதுவது எல்லாம் உண்டு. அந்தத் திரிபுகள் எதுவுமே இல்லாமல் அப்படியே அந்த மேற்கோள்களைக் காட்டி அதற்குப் பொருளையும் எழுதி அவர் எழுதியிருக்கிறதைப் பார்த்து, ஒருதடவை, இரண்டு தடவை பார்த்ததற்குப் பிறகு இந்தப் **பள்ளர் என்ற சொல்லும் மள்ளர் என்ற சொல்லும் ஒரே இனத்தைக் குறிப்பதற்காகப் பண்டை இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை என்பதை**, ஒரு முடிவுக்கு, இப்போது நானே வந்துவிட்டேன். I have became a converted. அந்த அளவுக்கு நல்ல அருமையான சிறந்த வரலாற்று நெறியிலே, அவர் கூட ஒரு இனத்தைப் புகழவேண்டும் என்பதற்காக எழுதியதாக எந்த இடத்திலேயும் பார்க்க முடியாது, அதுதான் நெறி, அந்த நெறியிலே இருந்து நன்றாக அழகாகத் தொகுத்திருக்கின்ற காரணத்தினாலே அதுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் சொல்வதற்கில்லை என்பதை முதலிலே என்னை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்ம பூங்குன்றன் கிட்டக்கூட நான் பேசிக்கொண்டிருந்தபோது, சில பாடல்களை எடுத்துப் பார்க்கிறபோது, கம்பநாடன் பாடல்களிலிருந்தெல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள், திருவிளையாடற்


## உடனடி வேலை வாய்ப்பு

அன்புடையீர்,

சில நிறுவனங்களில் **வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்துள்ளோம்**. படித்த, தகுதியான, நாணயமான, **உழைக்க** தயாராய் உள்ளவர்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலைவாய்ப்பு உண்டு. எனவே உடனடியாக தங்களின் படிப்பு சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கவும்.

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் / தவறியவர்கள் - ஆண்கள்.
**மாதச் சம்பளம்: ரூ. 2500/ க்கு மேல்**

+2 தேர்ச்சி பெற்றவர்கள், அதற்கு மேல் படித்தவர்கள் - ஆண்கள்.
**மாதச் சம்பளம்: ரூ.7000/ க்கு மேல்**
(இரண்டு சக்கர வாகனம் ஓட்டத் தெரிந்தவர்கள் - ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்கள்)

**சாதி, மதம் வேறுபாடு இல்லை**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

கல்வி வேலைவாய்ப்பு உதவி மையம்
சமூக உரிமை இயக்கம்,
154/2, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 17.

புராணத்திலிருந்தெல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள், அதில் எல்லாம் இந்த நிலத்தை உழுகின்ற வேளாண் குடி மக்களுக்கு மள்ளர் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை என்கிற அளவுக்குச் சான்றுகளோடு எடுத்துக் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலே, முதலிலே தொன்மையாக அந்தப் பெயர் வருகின்ற பாடல்களையெல்லாம் அவர் எடுத்துக் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலே அதிலே இனிமேல் ஐயப்பாடு வேணும் என்பதே இல்லை. அதுக்கு யாருமே ஐயப்படவேண்டிய தேவை இல்லை.

**கற்கால மனிதன்**

நாம் வரலாற்று ஆசிரியர்கள் ஆகையினாலே கொஞ்சம் பின்னைப் போய் பின்னைப் போய் பின்னைப் போய் தொன்மையான காலத்திலே இருந்து படிப்படியாக சமுதாயம் எப்படி வளர்ந்தது என்பதை பார்க்கின்றவர்கள் ஆகையினாலே அந்த நெறியிலே ஒன்று இரண்டு பார்ப்போம்.

கற்கால மனிதன் என்று ஒருவனையும் பின்னர் வந்த ஒரு சமுதாயத்தையும் ஆராய்ச்சி செய்வதற்கு Prehistoric Archaeology என்று பேர். அதாவது எழுத்தின் மூலமாக வரலாறு தெரியாத ஒரு சமுதாயத்தை அந்த சமுதாயம் விட்டுச் சென்றிருக்கின்ற பொருள்களைக் கொண்டு அவனுடைய சமுதாயம் எப்படி இருந்தது என்று ஆராய்ச்சி செய்கின்றது இந்த Prehistoric Archaeology. அதிலே கல்லினாலே செய்யப்பட்ட அந்தக் கற்கருவிகளைக் கொண்டு மனிதன் வாழ்ந்திருக்கிறான் என்ற நிலையிலே இருந்து படிப்படியாக நாங்கள் படித்து வருகிறதிலே முதல் படி First Stage கரடுமுரடான கற்களை வைத்துக் கொண்டு மலைக் குகைகளிலே வாழ்ந்து கொண்டு விலங்குகளை வேட்டையாடுகின்ற நிலையைத்தான் நாம் ஆதி மனிதனுடைய வாழ்க்கையாகப் பார்க்கிறோம். அதற்கு முன்னே எப்படி இருந்தது என்று எல்லாம், ஆறறிவு படைத்தவன் மனிதன் என்றெல்லாம் சொல்கிறார்கள், எல்லாவற்றையும் இப்ப மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது. இப்ப அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கிற ஆராய்ச்சிலே அதைக்கூட மாற்றிக் கொள்ளலாம். ஆறறிவு மனிதனுக்கு மட்டும்தான் இருக்கிறதா? சாதாரணமாக விலங்குகளுக்குக்கூட, ஒரு நாயை எடுத்துக் கொண்டால், எஜமானன் என்றால் அவனிடத்தில் பிரியமாக இருக்கிறது. வேறு ஒருத்தன் என்றால் அவனை உள்ளே விடாமல் இருக்கிறது. அதனால் அதற்கு மனிதனைப் பகுத்தறியும், இவன் என்னுடைய ஆள், அவன் மாற்றான் என்பது தெரிந்த ஒரு அறிவு இருக்கிறதென்றால் அது பகுத்தறிவுதானே. பறவைகளுக்குக் கூடப் பார்த்தால், காக்கை மரத்திலே கூடு போடும், கூடு போட்டு முட்டை விட்ட உடனே அங்கே யாராவது வராமல், யாரும் அந்தப்புறம் வராமல் பறவைகள் பறந்து கொண்டே இருக்கும். யாராவது

## 14 எண்ணின் மகிமை

திருமுருகாற்றுப்படையில் மள்ளர் மரபை மந்திர மரபு என்று கூறுகின்றார் அதன் ஆசிரியர் நக்கீரர். நமது முன்னோர்கள் மிகச் சிறந்த அறிவாளிகள் பல நூற்றாண்டு ஆராய்ச்சிக்குப்பின் கேட்டதைத் தரக்கூடிய, எந்தத் துறையிலும் முதன்மையில் இருக்கக்கூடிய மந்திரக்கோலாக உள்ள மள்ளர்-மல்லர் என்ற பெயரை நமக்கு வழங்கி உள்ளார்கள். ஆனால் அதை நாம் பயன்படுத்தாமல் பேதைமையில் உள்ளோம். மள்ளர் நேர்மையைக் கற்பு போன்று பாதுகாப்பவர்கள். மேலும் மள்ளரின் சிறப்புக்களை (MALLAR = 4+1+3+3+1+2=14) எண் கணிதமேதை டாக்டர் மஹாதன் சேகர் ராஜா கூறுவதைப் படியுங்கள்.

**14-ம் எண்ணில் பெயர் இருந்தால்...?!**

14-ம் எண்ணில் பெயர் இருந்தால், ஆரம்பத்தில் மெதுவாகத்தான் இருக்கும். பின்பு, மெதுவாக இருந்த 14-ம் எண்ணின் தாக்கம் படிப்படியாக சரியான வேகத்தில் சென்றுவிடும். 14-ம் எண்ணில் பெயர் இருந்தால் ஆரம்ப காலத்தில் ஒரு நிறுவனத்தில், சாதாரண கடைநிலை ஊழியராகப் பணி புரிந்திருந்தாலும், நாளடைவில் அந்த நிறுவனத்தில் நீங்கள் பேசப்படும் நபராக காணப்படுவீர்கள். ஒரு காலத்தில் எந்த நிறுவனத்தில் கடைநிலை ஊழியராகத் பணியை துவங்கினீர்களோ, அதே நிறுவனத்தில் நீங்களும் ஒருவராக டைரக்டராக வருவீர்கள். ஏனென்றால் 14-ம் எண் எதிராளிகளின் நாடி, நரம்பை தகர்க்கக்கூடிய அபூர்வ சக்திக் கொண்ட எண்ணாகும். இந்த எண்ணில் பெயர் உள்ளவர்களை எதிராளிகள் எதிர்த்தால் ஆரம்பத்தில் எதிர்ப்பவர்கள் வெற்றிப் பெறுபவர் போன்று காணப்படும். ஆனால் முடிவில் 14-ம் எண்ணிற்கு மேலும் ஒரு சிறப்பு உண்டு. அதாவது, இவர்களிடத்தில் புகழ் தாமதமாக இவர்களைத் தேடி வரும். அதாவது உங்களது பொறுமையை சோதித்து அதன்பின்தான் இந்த 14-ம் எண் மூலம் வெற்றி கிடைக்கும். வெற்றி கிடைப்பதற்கு தாமதமாக இருந்தாலும் வெற்றி கிடைத்தபின், அந்த வெற்றியை யாராவது தடுக்க நினைத்தாலும், தடைசெய்ய முயன்றாலும், நிச்சயம் ஒருகாலும் அவர்களது எண்ணம் ஈடேறா! ஏனென்றால் 14-ம் எண்ணின் சக்தி அத்தனை வலிமைக் கொண்டது. 14-ம் எண்ணில் பெயர் உள்ளவர்களது வாழ்க்கை ஒருகாலமும் தோற்றுப் போனதாக சரித்திரம் கிடையாது. 14-ம் எண்ணில் பெயர் உள்ளவர்களே, உங்களது வெற்றி ஆரம்பத்தில் தாமதமாக கிடைக்கும். ஆனால், வெற்றி கிடைக்க துவங்கிய பின் உங்களது வெற்றியை தீர்க்கதரிசனமாகத் தக்க வைத்துக் கொண்டு விடக்கூடிய எண்தான் 14-ம் எண்ணாகும்!

**-- மள்ளர் முன்னேற்றப் பேராயம்**
**- கீர்த்திபாண்டிய மள்ளர்**

ஒருத்தர் அந்த சமயத்திலே வந்தால் அவரை துரத்துகிற மாதிரி பறந்து வரும். இவர் அது தெரியாமல், இவர் பறவையைத் துரத்தினார் என்றால் அது குஞ்சு பொறித்துப் போகிற வரையில் இவரை எங்கு பார்த்தாலும் ஓடிப் போய் அடிக்கும். அதே வேறு ஒருத்தர் போனா அடிக்காது. இந்த, முதலில் கையால் விரட்டுகிறவனை எங்கு போனாலும் உச்சிக் கிளையிலிருந்து பறந்து வந்த ஒரு அடி அடிச்சிட்டு ஓடும். அதற்குக்கூட பகுத்தறியும் அறிவு இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுத்தறிவிலே இது ஒரு பத்து விழுக்காடு இருக்கு, நமக்கு 100 விழுக்காடு இருக்கிறது என்ற வேறுபாட்டுலே வேண்டும் என்றால் சொல்லலாமே தவிர, பகுத்தறிவு என்பது உயிர் வாழ் இனங்கள் அனைத்திற்கும் அந்தப் பகுத்தறிவு என்பது ஓரளவுக்கு இருக்கிறது என்பது நமக்கு இப்பொழுது விஞ்ஞான அறிவிலே புரிகிறது. அதனாலே நல்ல முழுமையாக இருக்கக்கூடிய நிலையிலே ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். என்ன மாற்றம்?

### புதிய கற்காலம் – மள்ளர் வரலாறு தொடக்கம்

நாம், இடம் இடமாகப் பெயர்ந்து விலங்குகளை வேட்டையாடிய மனிதன், ஒரு இடத்திலே தங்கி அந்த இடத்திலே பயிர் செய்து அந்தப் பயிரை இன்றைக்கும் நாம் உண்ணலாம், இரண்டு மாதம் கழித்து மழை பெய்யும் போது அல்லது பனிக்காலம் வரும்போது அந்தக் காலத்திலே கூட உண்பதற்கு இப்போதே சேமித்து வைத்துக் கொள்ளலாம் என்கின்ற ஒரு கருத்துத் தோன்றிய காலம் அதை புதிய கற்காலம் என்று சொல்வார்கள். இந்தக் கல்லு, கரடுமுரடான கல்லைத் தேய்த்து வழ வழ என்று செய்து பயன்படுத்தியது. அதைப் புதிய கற்காலம் என்று சொல்வார்கள். அதிலே முதல் புரட்சியாகச் சொல்வது அவர்கள் அடைந்த வெற்றி, பயிர் செய்யும் ஆற்றல். இது செய்தவர்கள் அந்தக் காலத்திலே பெண்கள். முதல் முதலிலே பயிர் செய்து, ஆண்கள் எல்லாம் வேட்டைக்கு போய் விடுவார்கள், பெண்கள் இருக்கிற இடத்திலேயே இருந்து பயிர் செய்து அந்தப் பயிரினால் வரக்கூடிய தானியங்களை சேமித்து வைக்கக்கூடியது. கல் கொண்டு ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்கள் என்று சொன்னதினாலே அதற்குப் புதிய கற்காலப் புரட்சி (Neolithic Revolution ) என்று பெயர்.

புதிய கற்காலப் புரட்சி என்று பண்டைய கால மனிதர்கள் ஏற்படுத்தினார்கள். அதனாலே அந்த நிலையிலே பார்த்தோமானால் பயிர் செய்வதும் வேட்டையாடுவதும், வில்லேந்தி வெளியே சென்று வேட்டையாடுவதும், ஒரே குழுவினர் செய்து இருக்கின்றனர் என்று தெரிகிறது. அதுக்கப்புறம் காலப்போக்கில் மறுபடியும் பிரிந்து பிரிந்து பிரிந்து எத்தனையோ பிரிவாகப் பிரிந்த போது ஒவ்வொரு குடும்பத்தினர் நம்முடைய மரபை வைத்திருக்கிறார்கள். அதனாலே பண்டைய பயிர் செய்யும் தொழிலை முதன் முதலில் கண்டு பிடித்த மூதாதையர்கள் என்று சொல்வதிலே பயிர் செய்வோர் வேளாண் குலத்தினர், புரட்சியை, இந்த முதல் புரட்சியை ஏற்படுத்தியவர்கள் அந்தப் பண்டைய காலத்திலே இருந்த கற்காலத்து மனிதர்களிலே புதிய கற்கால மனிதர்கள், அதிலே இருந்து உங்களுடைய வரலாறு ஆரம்பிக்கிறது.

இன்றைய இலக்கணத்திலிருந்தோ இலக்கியத்திலிருந்தோ நாம் படிக்கிறதில்லை. தொடக்கம் அந்த காலத்தினரின் வழிவந்தவர்கள் தாம் நாம் என்பதில் ஐயமில்லை. அதனாலேதான் Archaeology -யை refuse பண்ண முடியாது. அப்படிப் பார்க்கும் போது நம்ம நாட்டிலே ஒரு மரபு கொண்டு வந்தார்கள். இது எப்போது என்று தெரியாது. காலம் கணிக்க முடியாது. அதனாலே தெய்வத்தைச் சொல்லி தெய்வத்திலே இருந்து நாங்கள் தோன்றியவர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு மரபை கொண்டு வந்தார்கள். இதிலே எத்தனை தெய்வங்கள் நமக்குத் தெரிகிறதோ அத்தனை தெய்வங்களிலிருந்தும், இந்தத் தெய்வத்தின் வழிவந்தவர்கள், அந்தத் தெய்வத்தின் வழிவந்தவர்கள் என்று சொல்லுகிற மரபு.

### நீரைப் பாசனத்திற்கு கொண்டு வந்தவர் தேவேந்திரர்

வேதத்திலே ஒரு குறிப்பு வருகிறது. நீரை மலைக்குகையிலே கொண்டு போய் ஒழித்து, மேகம் போன்ற மலைக் குகையிலே ஒழித்து வைத்த ஒரு அசுரன், விருத்திராசுரன் என்று பெயர். அவனை அழித்து அந்த நீரை வெளியே ஓடும்படியாகச் செய்து வயலுக்குக் கொண்டு வந்த பெருமை தேவேந்திரனுக்கு உண்டு என்று சொல்லுவார்கள். தேவேந்திரனுக்கு இருக்கக் கூடிய பெருமை அந்த விருந்திராசுனைக் கொன்று நீரைக் கொணர்ந்து, பயிருக்கு கொண்டு வந்த பெருமை தேவேந்திரனுக்கு உண்டு என்று வேதத்தில் சொல்லப்படுகிறது. திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகிறது. இந்த விருத்திராசுன் என்கிறது ஒரு பாம்பு மாதிரி. ஒரு முகமும் ஒழிந்த கொண்டு இருக்கிற மாதிரி, இப்ப சைனாவில், சப்பானில் பாம்பு மாதிரி போடுகிறார்கள், டிராகன் என்று. இந்த மரிதிரி ஒரு அமைப்பைத்தான், கற்பனையானது, அதை அழித்து நீரைக் கொண்டு வந்தான் என்று எவ்வளவோ பாடல்கள் வேதத்திலே உண்டு. முதன்மையாக தேவேந்திரனைப் பற்றித்தான் வேதத்தில் அதிகம் சொல்லப்படுகிறது. இப்போது தேவேந்திரன் செய்த ஆற்றல் மிகு செயல் எது என்றால், இந்த நீரைக் கொண்டு வந்தது. நீரைக் கொண்டு வந்ததினால் பயிர் செய்ய வகை ஏற்பட்டது. அதனாலே அந்தத் தேவேந்திர குலத்திலே வந்தவர்கள் என்று சொல்வதினாலேயும் தப்பு இல்லை. தவறு இல்லை. பெருமையே உண்டு, வரலாற்று அடிப்படையிலே.

### மள்ளர்-சூரிய குலம், சந்திர குலம், அக்கினி குலம்

சூரிய குலம், சூரியன் இல்லாவிட்டால் பயிர் எல்லாம் விளையாது. பசுமை இல்லை. அந்தச் சூரிய கிரணம் பட்டால் தான் பசுமை வரும் என்று, அதுவும் வேதத்திலேயே சொல்லிஇருக்கிறது. எனவே ஒரு பிரிவினர் சூரியனை தனது குலத் தலைவனாகக்

கொண்டார்கள். மற்றொரு பிரிவினர், இதே குடும்பத்திலிருந்து பிரிந்து போனவர்கள் தாம், எல்லாம் ஒரே குடும்பத்திலிருந்து பிரிந்துபோய் காலத்திலே, இடத்திலே பிரிந்து போனவர்கள் இன்னொரு பிரிவினர் சந்திர குலத்தலே இருந்து வந்தவர்கள் என்றனர். சந்திரனும் ஒரு தன்மையை, குளுமையான தன்மையைக் கொண்டது. இந்த மாதிரி வந்ததிலே அக்கினி குலம் என்று ஒன்று. அக்கினி இல்லையென்றால் மனிதனுக்கு, சூரியன் ஆகாயத்திலே, விண்ணிலே இருப்பவன், சந்திரன் விண்ணிலே இருப்பவன், அவனை நம்மால் உருவாக்க முடியாது, ஆனால் அக்கினி இந்த நிலவுலகிலே இருக்கின்றவன். அதனாலே இயற்கையாக அக்கினி வருவான், நாம் உண்டாக்கலாம் என்பதால் அக்கினி குலத்திலே வந்தவன் என்று சில பேர் சொன்னார்கள். அதனாலே அந்தக் குலத்திலே வந்தவர்கள் என்று சொல்வதிலே இந்த மரபைப் பின்பற்றி நமது தேவேந்திர குல வேளாளர்கள் என்று இவர்கள் சொல்லி இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

**அண்மைக்கால வரலாறுகள்**

இந்தப் பெரும்பாலான நமது அண்மைக்கால வரலாறுகள், ஆங்கிலேயர்கள் வந்த பிறகு அவர்களுடைய, சென்சஸ் எடுக்கிறது, நம்மைபற்றி எழுதுகிறது, கெஜட்டீர்லே போடுகிறது இவைகளை வைத்துத்தான் அண்மைக் கால வரலாறுகள் பூராமே எழுதியிருக்கிறார்கள். 150 ஆண்டு கால வரலாறு இந்த கெஜட்டீர் அடிப்படையிலே முழுவதும் எழுதப் பட்டிருக்கிறது. அந்தக் கெஜட்டீர்லே இருந்து நாமநிறையச் செய்திகளைத் தொகுக்க வேண்டியிருக்கிறது. அதுக்கு நிறைய பணி செய்யக்கூடியவர்கள் வேண்டும். ஒரு சின்ன உதாரணம் மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன். எனக்கு எல்லா கெஜட்டீரும் போய்ப் பார்க்க முடியவில்லை. சில கெஜட்டீர்கள் மட்டும் பார்த்தேன்.

**தேவேந்திரர் - மக்கள் தொகை**

அதிலே 1921-ஆம் ஆண்டு சென்சஸ் எடுத்திருக்கிறார்கள். அந்த சென்சஸ் பிரகாரம் கோயமுத்தூர் மாவட்டத்தில் மொத்த பள்ளர்களுடைய, நான் பள்ளர் மள்ளர் என்று சொல்கிறேன். இதிலே இவர்கள் போட்டிருக்கிறது பள்ளர் என்று போட்டிருக்கிறார்கள். இரண்டும் ஒன்று தான், நாம அதனாலே வேறுபாடு இல்லை. நாம் அப்படிச் சொன்னாலும் தவறாக நினைக்காதீர்கள், 79223 பேர்தான் 1921 இல் ஆண்களும் பெண்களுமாகப் பள்ளர்களுடைய மொத்த எண்ணிக்கை 79223. இதிலே பெரும்பாலும் ஆண்களும் பெண்களும் இந்த இனத்தில் சமமாக இருந்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட பெண்கள் ஒரு ஆயிரம் பேர் அதிகமாகவே இருந்திருக்கிறார்கள். பெரும்பாலும் 1921 சென்சஸ்சில் பார்த்தால் இதிலே பெண்களுடைய தொகை அதிகமாகவே இருக்கிறது. பத்து வருடங்கள் கழித்து 1931 - இல் ஒரு சென்சஸ் எடுத்திருக்கிறார்கள். அந்த 1931 சென்சஸில் குறிப்பிட்டிருக்கிறது 29706 பேர்தான். 1921-இல் 79000, 1931லே 29 ஆயிரம் தான் போட்டிருக்கிறார்கள். இதிலே இரண்டு Possibility (நடந்திருக்கலாம்). ஒன்று 79 என்பது அச்சுப்பிழையினால் 29 என்று வந்திருக்கலாம் அல்லது நாங்க இப்ப அரசில் எல்லாம், அவர் இப்ப ரொம்ப சொன்னாறு, வேலை நல்லாச் செய்ய வேண்டும் என்று, கவர்மெண்ட்ல கொஞ்சம் பேர் இருப்பீங்க. நாமெல்லாம் போனா எப்படி கணக்கெடுத்துக் கொடுப்போம் என்பது நமக்கே தெரியும். அதனாலே ஒரு பத்து ஆண்டிலே 50 ஆயிரம் பேர் எங்கே போய் விடுவார்கள். அப்போ இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் சென்சஸ் is not an accurate census . இப்ப இன்னும் இருக்கு. மற்ற ஆண்டுகளில் சென்சஸ் எடுத்தது எப்படி என்று பார்க்கலாம். நான் இது உங்களுக்கு எடுத்துக்காட்டாகச் சொன்னேன். நாம் கோயமுத்தூர் மாவட்டத்திலே இருக்கிறதினாலே கோயமுத்தூர் மாவட்டத்திற்கு இருக்கக் கூடியது 1921- இல் 79000, 31 இல் 29000 தான் இருக்கு. அது நான்தான் ஒருக்கால் தவறாக எழுதிவந்து விட்டேனோ என்னவோ நீங்களும் ஒரு தடவை சரிபார்த்துக் கொள்ளுங்கள். வட ஆர்காடு மாவட்டம் என்று எடுத்தால் ஒருத்தர் கூடக் கிடையாது. ஆணிலும் இல்லை, பெண்ணிலும் இல்லை, 1921-இல். 1931-இலும் அதேதான். ஒருவரும் இல்லை - வடஆற்காடு மாவட்டத்தில் தென் ஆற்காடு 1921 - இல் இல்லை

---

... 2 ஆம் பக்கம் தொடர்ச்சி

வந்தபடியால், வேண்டும் என்றே எங்களது முன்னேற்றத்தைத் தொடர்ந்து தடுக்க வேண்டும் என்ற நோக்கில் பட்டியல் சாதியில் சேர்த்து உள்ளனர். அதே வேளையில், உழவுத்தொழில் மட்டும் பார்க்கும் பிற சாதியினரை பட்டியல் சாதியில் சேர்க்கவில்லை.

எனவே, எங்களை பட்டியல் சாதிப் பிரிவிலிருந்து நீக்கி மிகவும் பிற்பட்ட சமூகப் பட்டியலில் சேர்க்க வேண்டுமாய் வேண்டிக் கொள்கின்றோம்.

எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும் முகமாக அரசிதழில் பள்ளன் என்று இருப்பதை மள்ளர்-மல்லன் என்று மாற்றி ஆணை வெளியிடுமாறு வேண்டிக் கொள்கின்றோம். (1995 செப்டம்பர் 23 ம் தேதி இனி முக்குலத்தோர் தேவர் என்று அழைக்கப்படுவார்கள் என்று அரசு ஆணை வெளியிட்டது போல்).

இட ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் எங்களது மக்கள் தொகை அளவுப்படி மிக பிற்பட்டோர் பிரிவில் இடஒதுக்கீடு வழங்கினால் போதுமானது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடம் : செயமங்கலம், இவண்,
நாள் : 23.6.2006 **செ. மீ.கு. சிவமணி**

**தேவேந்திரர் அமைப்புகள் ஒவ்வொரு ஊரிலிருந்தும் இது மாதரி வேண்டுகோள்களை முதல்வருக்கு அனுப்ப வேண்டுகிறோம்.**

*1931 சென்சஸ் அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை. செங்கல்பட்டிலும் இல்லை. ஆகையால் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு. திருச்சியில் 1921 - இல் 124456. பத்தாண்டு கழித்த 1931 - இல் 98000 தான். இது ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்தது.*

**திருநெல்வேலியில்**

*1921 - இல் 196000*

*1931- இல் 190000*

**இராமநாதபுரம்**

*1921 - இல் 157000 பேர்*

*1931- இல் 158000 பேர் - ஒரு ஆயிரம் அதிகம்*

**மதுரை**

*1921 - இல் 139000 பேர்*

*1931- இல் எனக்கு கிடைக்கவில்லை*

**சேலம்**

*1921 - இல் 27000 மாவட்டம் பூராவும்*

*1931- இல் 25000 - இரண்டாயிரம் பேர் குறைவு*

**நீலகிரி**

*1921 - இல் இல்லை*

*1931- இல் 690 பேர்*

*இந்த மாதிரி சில புள்ளிவிவரங்கள் (Statistics), இதுலே தஞ்சாவூர் என்னாலே பார்க்க முடியவில்லை. மற்றதெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசை. தமிழ்நாடு முழுவதற்கும் இந்த மாதிரியான புள்ளிவிவரங்கள் வந்திருப்பதை நாம் முதலில் தொகுக்க வேண்டும். எத்தனை இருக்குமோ அது. இதிலே சில குறைபாடுகள் இருக்கும். இருந்தாலும் ஏதாவது ஒரு கணக்கு இருக்கணும். அதனாலே எனக்குத் தோன்றியது என்னவென்றால் முதலில் இதுகள் 1874 கூட எடுத்திருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் தொகுத்து நாம் மொத்த மக்கள் தொகை பார்க்க வேண்டும்.*

*இரண்டாவது இந்த சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு Questionire மாதிரி அடித்து அவர்களுடைய நிலை பற்றி ஒரு Statistics நாம் எடுக்க வேண்டும். அரசை நாம் நம்பிப் பிரயோஜனமில்லை. போகாமலேயே புள்ளி விவரம் எழுதிவிடுவார்கள். அதனாலே அது ஒன்று தொகுக்க வேண்டும். அது தொகுக்கும் போது இது எப்படி மலர்ந்தது என்று நாம் அறிந்து கொள்ள முடியும். இன்றைக்கு நாம் செய்யலாம். உங்களால் செய்ய முடியும். ஏன்னா உங்களுக்கு அருமையான ஒரு பத்திரிகை இருக்கிறது (மள்ளர் மலர்). உங்களுக்கு அந்த ஆர்வம் இருக்கிறது. துடிப்பு இருக்கிறது. மற்றவர்களை நம்புவதைக்காட்டிலும் நாமே அதை எடுத்துத் தொகுத்தோமானால் இன்றைக்கு 2001-லே இந்த சமுதாயம் எந்த நிலையிலே இருக்கிறது என்பது ஒரு கண்ணாடி போலத் தெரியும்.*

*இதிலே ஒன்று சொன்னேன். அதிலே பள்ளர் என்ற பெயரிலேதான் எல்லாவற்றையும் போட்டிருக்கிறார்கள். சில ஆண்டு பார்த்தால் இந்தப் பெயரே இருக்காது. சில ஆண்டு இந்த லிஸ்டுலே பள்ளி என்கிறவர்களுடைய பெயர் இருக்கிறது. இந்தப் பள்ளி என்ற பெயர்களுக்கு நேரே எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்று போடுகிற இடத்திலே, ஒரு சில மாவட்டங்களில் பள்ளியைத் தனியாகவும் வன்னியர் என்பவர்களைத் தனியாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனாலே 1921லே இவர்களை வேறாகக் கருதியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. பள்ளி என்பது தனியாகவும் வன்னியர் என்பது தனியாகவும் உள்ளது.*

*இதோட பாண்டிச்சேரியில் பிரெச்சுக்காரர்கள் சென்சஸ் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு இடத்தில் பள்ளன் என்று போடுவார்கள் இன்னொரு இடத்திலே பள்ளு என்றும் இன்னொரு இடத்தில் பள்ளியன் என்றும் போடுவார்கள். இதிலே எதை நமது பெயராகச் சரியாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதில் நமக்கே ஒரு ஐயப்பாடு உண்டு. இருந்தாலும் அதிலே என்ன இருக்கோ அதை எடுத்து வைத்துக் கொண்டு நாம் பார்க்க வேண்டும். பார்த்தோமானால் அதனுடைய அமைப்பு எப்படி இருந்தது என்பதற்கு இதுதான் சரியானது என்று தெரிய வாய்ப்புள்ளது. இதுதான் இன்றைய நிலை. ஏனென்றால் 2000 ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தாலும் அங்கு போகப் போவதில்லை. வரலாற்றை ஆராய்ச்சி செய்வது நாமெல்லாம் 2000 ஆண்டுக்கு முன்னே எப்படி இருந்தோமோ அது மாதிரி ஆகிறதுக்கு ஆராய்ச்சி செய்யவில்லை. ஆராய்ச்சி செய்வது சமுதாயத்திலே எப்படித் தோன்றினோம், எப்படி இருந்தோம், எப்படி வளர்ந்தோம், இன்று எப்படி இருக்கின்றோம், நாளை நம் சமுதாயம் எப்படி இருக்க வேண்டும். அதற்கு எவற்றை எல்லாம் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், எவற்றையெல்லாம் தள்ள வேண்டும் என்பதற்காகத்தான் வரலாறு படிக்கனும்.*

**வரலாற்றின் இன்றியமையாமை**

*இப்ப நம்ம ஊரில் வரலாறே வேண்டாம் என்று சொல்லி விட்டனர். வரலாறே படிக்காதே. வரலாற்றை (History) நீக்கி விடுங்கள் (abolish) என்ற ஒரு இயக்கம். இன்றைக்குச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகள் அனைத்திற்கும் காரணம் அந்த சமுதாயத்தை அறியாமல், அதனுடைய தன்மையைத் தெரியாமல், சமுதாயத்தை மாற்றி விடவேண்டும் என்று நினைக்கிறார்களே அதனாலே வருகிற (tension) மன இறுக்கம் தான் அது. என்னுடைய பழக்க வழக்கம், எவ்வளோ ஆண்டுகளாக இருந்த வந்திருக்கின்ற பழக்க வழக்கத்தை உடனே மாற்று என்று சொன்னால், மாற்ற முடியாது. யாரோ ஒருத்தர் வந்து வரலாறு கூடத் தெரியாமல், நமக்கு எவ்வளவோ மாயை எல்லாம் இருக்கிறது. உண்மை வேறு, நாம்*

நினைப்பது வேறு. அந்த மாதிரி இருக்கிற மாயை தான் இன்றைக்கு நிறைய, எல்லா இடத்திலும் இருக்குது. அதுவும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலே ரொம்ப மாயை இருக்கிறது. அந்த மாயையின் காரணத்தினாலே மாற்றி விடவேண்டும் என்று நினைக்கிறவர்கள் வரலாற்றை படிக்கவில்லை என்று சொன்னால், சமுதாயத்திற்கு நல்லது செய்ய முடியாது. சமுதாயத்தை மாற்ற முடியாது.

### சாதி ஒழிப்பு

உங்களுக்கு, எல்லோருக்கும், சாதியை ஒழித்து விட வேண்டும் என்று சொன்னார்கள். நிறையப் பேர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சாதியை ஒழித்து விடுவோம். சாதியைப் படிக்காதே, சாதியை அழிப்பதற்கு என்னடா வழி என்றால் வரதாச்சாரி தெரு என்று இருந்தால் சாரியை எடுத்து விட்டு வரதா தெருவு என்று போட்டு சாதியை எடுக்கிறார்களே ஒழிய, இன்றைக்கு சாதி என்ன நிலைமையிலே இருக்கிறது? இந்த நாற்பது ஆண்டுகளிலே செய்த புரட்சியினாலே இதை எடுக்க முடிந்ததா? இன்னும் வலுவாகப் (Strong- ஆக) போய் விட்டது. ஏன் என்றால் உணர்வுகளை அறிந்து, அவர்களுடைய வரலாற்றை அறிந்து அதைச் சொல்லும்போது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு வருவார்கள். அதனாலே நான் வரலாற்றிலிருந்து ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்.

### அரசின் குறிக்கோள்கள்

சோழர் காலத்திலே, நிறையச் செய்திகள், அவர்களுடைய கல்வெட்டுகளிலே இருந்து கிடைக்கின்றன. அந்த கல்வெட்டுகளில் அரசு வரும்போது அதனுடைய குறிக்கோள்கள் என்ன என்பதைப் பற்றி அரசன் எழுதுவான். அதைச் சொல்லுகிறபோது **'தந்தை இல்லாருக்குத் தந்தை ஆகியும், தாய் இல்லாருக்குத் தாய் ஆகியும், மைந்தன் இல்லாருக்கு மைந்தன் ஆகியும்'** என்று வருகிறது. அரசன் என்பது இப்போது ஆட்சி செய்ய வேணடியவர்கள் தந்தை இல்லாதவர்களுக்கு நம்முடைய அரசன் இருக்கின்றான், அவன் நம் தந்தைபோல் இருக்கின்றான். நம்மைப் பார்த்துக் கொள்வான் என்ற எண்ணம் மக்கள் மனதிலே வரும்படியாகத் தந்தை இல்லாருக்குத் தந்தையாகியும் அம்மா இல்லாவிட்டால், அந்த அன்புக்காக ஏங்குகின்றவர்களுக்குத் தாயாகியும், குழந்தையே இல்லாமல் வயதாகி, இப்போது மேலை நாட்டில் எல்லாம் ஒரு Struggle (மனப்போராட்டம்) அப்பா அம்மாவைத் தனியாக விட்டு விடுகிறார்கள், 80 அல்லது 90 வயது இருக்கும், இவன் கூடவே இருக்க மாட்டான், 3 குழந்தைகள் இருப்பார்கள், ஒருத்தர் கூட பார்க்கமாட்டார்கள். அந்த ஏங்குகின்ற காலத்திலே தனது தலைவன் இல்லையே என்று ஏங்குகின்ற காலத்திலே, அன்பை எதிர்பார்க்கின்ற காலத்திலே, இல்லாமல் போய்விட்டால், அப்போது தாயாகியும் அவன் ஆண்டான். எந்த அளவுக்கு செயல்படுத்தினார்களோ (Practical - ஆக பண்ணினார்களோ) அதுவேறு. ஆனால், ஆட்சி செய்கிறவர்களுடைய குறிக்கோள், அது மட்டும் அல்ல, இன்னும் ஒன்றும் சொல்கிறான், **ஒன்றினோடு ஒன்றுக்கும், ஒருவரோடு ஒருவருக்கும் ஒருத்தியோடு ஒருத்தருக்கும் வேறுவேறு பகைமை மனத்து இன்று விழைந்து காதலுடன் வாழும் படியாக** ஆண்டான். இந்த நாட்டிலே இருப்பவர்களுக்கு, ஒருவருக்கு ஒருவர் விரோதம் மனதில் கூட இருக்கக்கூடாதாம். அப்போதும் எத்தனையோ குடிகள் இருந்தனர், மக்கள் இருந்தனர், பிரிவுகள் இருந்தன. இருந்த போதிலும் கூட ஒருவர் மற்றவரைப் பார்த்து விரோதம் கொள்ளாதது அரசனுடைய ஆட்சியினாலே அல்லாவிடில் மனத்திலே கூட அந்த வெறுமை வரக்கூடாது என்பது மாதிரி ஆண்டதாக அவனுடைய கல்வெட்டிலே, சோழன் கல்வெட்டிலே இருக்கிறது.

இப்பப் பாருங்க, நம்ம ஆட்சி வந்திருக்கலாம். நமக்கு யார் யார் விரோதி என்றால், வெளிநாட்டில் இருக்கிறவன் இல்லை, நம்ம மேலே இது பண்ணுகிறவன் இல்லை, இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று இல்லை, எல்லோரும் நமக்கு விரோதின்னா நாமதான் விரோதி என்று ஆகியது. 1000 ஆண்டுகளுக்குப் பிறகு, சமுதாய முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டிய காலத்திலே வரலாற்றை தெரிந்து இருந்தார்களேயானால், அதிலிருக்கக்கூடிய குறைபாடுகளைக் களைந்து விட்டு எல்லோரும் என்னுடைய **'காவல் புலவி ஓம்புமதி'** என்று எழுதியிருக்கிறார். ஒரு உதாரணம் கொடுத்து இருக்கிறார்கள். புறநானூற்றிலே ஆண்ட அரசன், குழந்தையைக் காப்பாற்றுவது போலத் தன்னுடைய மக்களை எல்லாம் காப்பாற்றுவதிலே சிறந்தவன் என்பதற்காக. அந்த மாதிரி ஆண்டானா என்கிற நிலைமை வருகிறபோது நமக்குள்ளே இப்போது இவ்வளவு சிரமம் இருக்காது. அதற்காகவாவது கல்வெட்டைப் படிக்கனும், வரலாற்றைப் படிக்கனும்.

... தொடச்சி அடுத்த இதழில்

Printed by Mrs. Thulasimani Mariappan and Published by Dr. Guruswami Siddhan on behalf of Devendra Kula Velalar Sangham and Printed at Maa Mannar Achakam, 10/2A, Nalvar Nagar, Coimbatore - 641 046 and published at 10/2, Nalvar Nagar, Coimbatore - 641 046. Editor : Dr. Guruswami Siddhan

செய்தித்தாளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழக அஞ்சலகத்தில் ஒவ்வொரு மாதமும் 10 & 11 தேதிகளில் சேர்க்கப்படுகிறது.

அனுப்புநர் :

**பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்,**
**ஆசிரியர், மள்ளர் மலர், 10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல், கோயமுத்தூர் - 641 046.**

பெறுநர்:

உயர்திரு

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .